janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 ஏப்ரல் 02 - ஏப்ரல் 08 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 52







## எங்கே எனது வேலை?

## லட்சக்கணக்கான இளைஞர்களை சந்திக்கும்

# தொடர் பரப்புரை இயக்கம்




**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் மார்ச் 23 மாவீரன் பகத்சிங் நினைவு நாளில் தொடங்கி, பாலன் பிறந்த நாள் வரை எங்கே எனது வேலை? என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் தொடர் பரப்புரை பயணம் நடைபெற்று வருகிறது.**

வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க பகத்சிங் தேசிய வேலை உறுதியளிப்புச் சட்டத்தை(ஙிழிணிநிகி) நிறைவேற்று!

வேலை கொடு அல்லது வேலை கொடுக்கிற வரை மாதம் 10 ஆயிரம் நிவாரணம் கொடு!

ஒன்றிய மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை உடனே நிரப்பு!

புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு வேலை வாய்ப்புகளில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடு!

வேலை வாய்ப்புக்களில் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையினை ரத்து செய்து, நிரந்தர பணியிடங்களாக மாற்றியமைத்திடு!

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியமாக 21 ஆயிரம் கிடைப்பதை உறுதிப்படுத்து!

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 45 வயதுக்குள் இறந்து விடுவோர் குடும்பத்திற்கு 25லட்சம் இழப்பீடு வழங்கு!

தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்க சட்டம் நிறைவேற்று!

என்ற கோரிக்கை முழக்கங்களோடு நடைபெற்று வரும் தொடர் பரப்புரை பயணம் ஒசூர், வேதாரண்யம், சென்னை, கன்னியாகுமரி ஆகிய நான்கு முனைகளில் தொடங்கி தற்போது ஒசூர் பயண குழு கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு, கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் வழியாக சுற்றுப்பயணம் செய்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மாணவர்களை சந்தித்து வேலை யின்மைக்கு எதிரான கருத்துக்களை விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம் கொண்டு சென்று வருகிறார்கள்.

சென்னையில் தொடங்கப்பட்ட பயணக் குழு காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை சந்தித்துள்ளது.

வேதாரண்யத்தில் தொடங்கப்பட்ட பயணக் குழு நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை சந்தித்துள்ளது.

கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்ட பயணக் குழுவானது திருநெல்வேலி, தென்காசி, ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, மதுரை ஆகிய மாவட்டங்கள் வழியாக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை சந்தித்துள்ளது.

இந்த பரப்பரை பயணத்தில் லட்சக்கணக்கான துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. செல்லும் இடங்களில் எல்லாம் சுவர் விளம்பரங்கள், டிஜிட்டல் விளம்பரங்கள், சுவரொட்டிகள் என ஏராளமான விளம்பரங்கள் செய்யப்பட்டு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான இடங்களில் வரவேற்பு மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், மாணவர்கள், மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மிகுந்த எழுச்சியோடு நடைபெற்று வரும் தொடர் பரப்புரை பயணம் திருச்சியில் ஏப்ரல் இரண்டாம் தேதியில் சங்கமிக்கிறது. மாலை 4 மணிக்கு புத்தூர் நால் ரோட்டில் எழுச்சி மாநாடு நடைபெற இருக்கிறது.

தொடர் பரப்புரை பயணத்தில் மேற்கொண்ட வரவேற்பு கூட்டங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், விருதுநகரிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் சேலத்திலும், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமைய்யா கிருஷ்ணகிரியிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொருளாளர் எம். ஆறுமுகம் கோவையிலும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

வழியெங்கும் உற்சாக வரவேற்பை சந்தித்து வந்து கொண்டிருக்கும் தொடர் பரப்புரை பயணக் குழுவினர் நடைபயணமாகவும் முக்கிய நகரங்களில் மக்களை சந்தித்து வருகிறார்கள்.



கட்சிக் கடிதம்

# அகற்றிடுவீர் புல்லுருவியை...



போர்க்குணமிக்க தோழர்களே !

## அபாயத்தை நன்கு அறிந்திடுவீர், அகற்றும் பணிகளை தொடங்கிடுவீர் !

தனக்குரிய சின்னஞ்சிறு குடிசைக்கருகில் மா கன்று ஒன்றை நட்டு, நாள் தவறாமல் தண்ணீர் ஊற்றி, தேவையான அளவிற்கு உரமிட்டு, கால்நடைகளால் அச்செடிக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாத்து வளர்த்து வந்தான் ஒரு ஏழை.

செடி மெல்ல மெல்ல வளர்ந்தது; கிளைகள் பரப்பியது. செடியாக இருந்தது தற்போது மா மரமாக வளர்ந்தது. வளர்ந்த மரம் பூ பூத்தது, மகிழ்ந்தான். பூக்கள் பிஞ்சுகளானது, மகிழ்ந்தான். பிஞ்சுகள் காய்களானது, மிக மகிழ்ந்தான். காய்கள் முற்றிய கனியானது, பெருமகிழ்ச்சி கொண்டான்.

முக்கனியில் ஒன்றான மாங்கனியைப் பறித்து தானும், தனது குடும்பத்தில் உள்ள மனைவி, மக்களுடன் சேர்ந்து ருசித்து மகிழ்ந்தான்.

தன் குடும்பத்திற்கு மட்டுமின்றி அக்கம் பக்கத்தில் உள்ளோருக்கும் அளித்து மகிழ்ந்தான். வெளியூரில் உள்ள தனது உறவினர்களுக்கும் வள்ளல் போன்று வாரி வழங்கினான்.

கனியை பெற்றவர்கள் அகம் மகிழ்ந்தனர். ஏழை தான் வளர்த்திட்ட மரத்திலிருந்து கிடைக்கும் கனிகளை தனக்கு மட்டுமின்றி, தன் குடும்பத்திற்கு மட்டுமின்றி, உற்றார், உறவினர், ஊரார் என எல்லோருக்கும் வழங்கும் அவனது நற்குணத்தை போற்றிப் பாராட்டினர்.

இவை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்தது. மா மரம் பூக்கும், பருவ காலம் எப்போது வரும் என்று காத்திருப்பான்.

மா மரத்தை அன்றாடம் பார்த்துப் பார்த்து பாதுகாத்து வந்தவன், அது தரும் பலனை ஆண்டுதோறும் அனுபவித்து மகிழ்ந்தவன், செடி மரமாகி, இன்றோ அது பருத்து பெருமரமாகி விட்டது. சுண்டு விரல் கனத்தில் வைக்கப்பட்ட செடி, இன்று கட்டி அணைக்க முடியாத அளவிற்கு பெரும் மரமாகிவிட்டது.

மரம் வைத்த ஏழையின் வயது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து இன்று முதியவன் ஆகிவிட்டான்.

இவனைப் போன்று மரத்திற்கும் வயது கூடிவிட்டது. மரத்திற்கும் வயது எழுபத்தைந்து ஆகிவிட்டது.

கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் மரம் பூத்து, காய்க்க தொடங்கிய நாள் முதல் ஆண்டுதோறும் சளைக்காமல் கனியை வஞ்சகமின்றி வழங்கிக் கொண்டே இருந்தது.

எளியவனும் மரத்தின் வள்ளல் தன்மையை எண்ணி எண்ணி பெருமிதம் கொண்டான்.

மரம் தந்திட்ட பலன்களை ஆண்டுதோறும் அனுபவித்து, அது தந்திட்ட கனியை உண்டு மகிழ்ந்தான்.

நாள் தோறும் மரத்தைப் பார்த்தான். ஆண்டுதோறும் பூவை, பிஞ்சை, காயை, கனியை கண்டு மகிழ்ந்தான்.

பெருத்த மரத்தின் கிளை ஒன்றில் ஒரு செடி முளைத்திருப்பதைக் கண்டான். அது மிக சின்னஞ்சிறு செடியாக இருந்தது. அதனைக் கண்டவன் ஏதோ ஒரு செடி மரத்தில் முளைத்துள்ளதை பார்த்தவன், அதனை பெரிதுபடுத்தவில்லை.

ஏதோ ஒரு செடி அது வளரும், மற்ற கிளைகளுக்கும் பரவும். அது மரத்தையே அழிக்கும் புல்லுருவி செடி என்பதனை உணரவில்லை – உணர முடியவில்லை.

ஒரு கிளையில் உதயமான செடி, மற்ற மற்ற கிளைகளிலும் ஆங்காங்கே முளைத்தது. மரம் எங்கும் பரவலாகக் காணப்பட்டது. மிக வேகமாக பரவியச் அச்செடி மரத்தையே பகுதி பகுதியாக பட்டுப்போகச் செய்தது.

பல கிளைகளிலும் பட்டுப்போய் காய்ந்து, கருகிய நிலையில், மரத்திற்கே பேராபத்தை ஏற்படுத்தும் செடி சாதாரண செடியல்ல, கொடிய புல்லுருவி செடி என்பதனை அறிந்து, அவைகளை அகற்றி மொத்தமாக சாகப் போகும் மரத்தை காப்பாற்றினான்.

சின்னஞ்சிறு செடியாக முளைத்திட்ட செடி போல் தான், இன்று பாஜக என்ற புல்லுருவி நாட்டையே சாகடிக்கத் துடிக்கிறது.

இரண்டு இடங்களில் தானே பாஜக வென்றது என்று அலட்சியம் காட்டினோம். அது இன்று நாட்டையே கபளீகரம் செய்திடும் மிருக பலத்தை பெற்றுள்ளது.

உலக நாடுகளில் ஆகப்பெரும் நாடாக மட்டுமல்ல, தங்களின் நாட்டை ஜனநாயக முறையில் வழிநடத்தும் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு, அது காட்டிய நன்னெறிப் பாதையில் மக்கள் உள்ளார்கள்.

அண்ணல் அம்பேத்கர் நமக்கு அளித்திட்ட பெருங்கொடை தான் அரசியலமைப்புச் சட்டம். அச்சட்டத்தையும், அச்சட்டம் உருவாக்கியுள்ள அமைப்புகளையும் நிலை குலையச் செய்து வருகின்றது பாஜக.

கொடிய கொள்கைகளைக் கொண்ட ஆர்.எஸ். எஸ். அமைப்பின் அரசியல் பிரிவாக செயல்பட்டு வருகின்றது பாஜக. நாட்டை ஆளும் வாய்ப்பளித்த மக்களுக்கு எதிராக செயல்படுகின்றது.

ஏறிவந்திட்ட ஏணியை இடது கால் கொண்டு உதைத்தெறிய துணிந்து விட்ட துரோகக் கும்பல் தான் பாஜக என்கிற புல்லுருவியை அகற்ற துணிந்திடல் வேண்டும்.

அதானி என்கிற ஒரு பயங்கர மோசடிக்கார தொழில் அதிபருக்கு நாட்டின் பிரதமர் ஏஜெண்டாக இருப்பதனை எண்ணும்போது நாடே வெட்கித் தலைகுனிய வேண்டிய அவலமான நிலை ஏற்பட்டுள்ளது.

நாடு விடுதலை பெற்ற நாள் முதல் இந்நாடு ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், ராஜீவ் காந்தி, வி.பி. சிங், தேவகௌடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன் சிங் என்று பிரதமர்களையும், நந்தா, சந்திரசேகர் போன்ற இடைக்காலத்து பிரதமர்களையும் பார்த்துள்ளது.

ஆனால் நரேந்திர மோடி என்கிற பிரதமர் பொய் சொல்லும் பிரதமர். ஒரு முதலாளியின் முகவர் என்று நாட்டு மக்கள் வேறு எந்த ஒரு பிரதம அமைச்சரையும் குறிப்பிட்டது இல்லை.

நாட்டைப் பற்றி கவலை இல்லை. நாட்டு மக்களைப் பற்றி கவலை இல்லை. எனது கவலையெல்லாம் அதானி, அம்பானி, லலித் மோடி போன்ற விரல்விட்டு எண்ணிடத் தக்கவுள்ள சில பெரும் கோடீஸ்வரர்களின் வளர்ச்சி ஒன்றே என செயல்படும் மோடி போன்றதொரு ஒட்டுமொத்த ஜன விரோத பிரதமரை கண்டது இல்லை.

நாட்டையே ஒட்டுமொத்தமாக பலியாக்க துணிந்து விட்ட அதானி என்கிற ஒரு அயோக்கியனுக்காக, நாட்டின் மிக உயர்ந்த அமைப்பான நாடாளுமன்றத்தையே நடைபெறாமல் செய்துவிட்ட ஜனநாயக விரோதி மோடி என்கிற புல்லுருவி.

அரசியல் அமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் அனைத்தும், இன்று மோடியின் புல்லுருவி ஆட்சியால் பாறிக்கப்பட்டு வருகின்றன.

பேச்சுரிமை, எழுத்துரிமை, ஏன் வாக்களிக்கும் உரிமை கூட இன்று பறிக்கப்படுகின்ற மிக பரிதாபத்திற்கு செல்கிறது.

நாடு எங்கே செல்கிறது? சர்வாதிகாரத்தை மிஞ்சி பாசிச பாதையில் நடை போட தொடங்கிவிட்டது.

இரண்டாம் உலகப்போரின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் உயிர்கள் பலியாக காரணமாக இருந்த கொடுங்கோலன் ஹிட்லரை பின்பற்றி, தான் இந்தியாவின் ஹிட்லராக துடியாய் துடிக்கின்றார் மோடியார்.

பாசிசக் கொள்கையைக் கொண்டவன் கதி என்னவானது? என்கின்ற வரலாற்றை படித்திடல் வேண்டும்.

மொத்தத்தில் மா மரத்தை புல்லுருவி செடி அழிக்க முனைந்தது போல் இன்று ஆர்.எஸ். எஸ். – பா.ஜ.க. என்ற புல்லருவி நாட்டையே அழிக்கத் துணிந்துள்ளது.

புல்லுருவி என்கிற (பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ்.) கொடிய செடியை இனியும் விட்டு வைக்கலாகாது.

அகற்றிட வேண்டும் – தாமதமின்றி முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அத்தகைய பணிகளை தொய்வின்றி, சோர்வின்றி, கொடிய புல்லுருவியை அகற்றிட ஆயத்தமாக வேண்டும்.

ஆயத்தமாகிடுவீர். இன்றே, இப்போதே களப்பணியில் பங்கேற்பீர். ஆபத்தை அறிந்த பின்னரும் காலதாமதம் செய்தால் புல்லுருவி செடி வாய்ப்பை பயன்படுத்தி மள, மள வென வளரும் என்பதனை கருத்தில் கொள்வீர் !

மீண்டும் சந்திப்போம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



நாட்டையே ஒட்டுமொத்தமாக பலியாக்க துணிந்து விட்ட அதானி என்கிற ஒரு அயோக்கியனுக்காக, நாட்டின் மிக உயர்ந்த அமைப்பான நாடாளுமன்றத்தையே நடைபெறாமல் செய்துவிட்ட ஜனநாயக விரோதி மோடி என்கிற புல்லுருவி.

# பகத்சிங் இலட்சியங்களை உயர்த்திப் பிடிப்போம்!



**து.ராஜா** Ex M.P.
**பொதுச் செயலாளர்,** CPI

**“பாட்டாளி வர்க்கம் வெல்லும்!**

**முதலாளித்துவம் வீழும்!**

**ஏகாதிபத்தியம் ஒழியும்!”**

**என்று 1930 ஆம் ஆண்டில் லெனின் நினைவு நாளையொட்டி மூன்றாவது அகிலத்திற்கு அனுப்பவிருந்த தந்தி செய்தியை கழுத்தில் செந்துண்டு சுற்றியவாறு பகத்சிங் வாசித்தார்.**

பகத்சிங்கின் இந்தச் செய்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சர்வதேச ஒற்றுமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். தம் சித்தாந்தத் திரட்சியை முன்னிலைப்படுத்தியதன் அடிப்படையில் தான் அவர் ஒரு சுதந்திர இந்தியாவை, வளமான வையகத்தைக் கட்டமைக்க விரும்பினார்.

### சமுதாயம் பற்றிய புரிதல்

“இந்திய உழைக்கும் மக்களும், இயற்கை வளங்களும் சிற்சில ஒட்டுண்ணிகளால் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் வரையில், ஒரு போர்ச்சூழல் நிலவிக் கொண்டு தான் இருக்கும். இத்தகைய சுரண்டல்காரர்கள் பிரிட்டிஷ் முதலாளிகளாகவோ, பிரிட்டிஷ் மற்றும் இந்திய முதலாளிகளின் கூட்டாகவோ, அல்லது முற்றிலும் இந்திய முதலாளிகளாகவோ இருக்கக் கூடும். அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டும்; அவர்களை வீழ்த்த வேண்டும்.” என்று பஞ்சாப் கவர்னருக்கு பகத்சிங் அனுப்பிய இறுதி மனுவில் பிரகடனம் செய்திருந்தார்.

சமுதாயத்தைப் பற்றிய பகத்சிங்கின் புரிதலின் அடிப்படையில், நாம் இன்றைய எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; அவரின் மகா உன்னதமான தியாகத்தில் இருந்து சில படிப்பினைகளை நாம் பெற்றிட வேண்டும்.

அண்மைக் காலங்களில், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, சமத்துவமின்மையும், குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் செல்வம் குவிவது ஆகியவை அதிகரித்து உள்ளது. பகத்சிங்கும் அவரது காலத்தில் இவை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வாழ்விடத்திற்காகவும், இரு வேளை உணவிற்காகவும் உழைக்கும் மக்கள் இன்று கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கும் போது, முதலாளிகள் செல்வத்தைப் படைப்பவர்கள் என்று போற்றப்படுகிறார்கள்.

### பாதுகாப்பற்றச் சூழல்

சட்டத்திற்குப் புறம்பான, மோசமான பின்விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்காமல், அறநெறியற்ற இலாப வெறியால் இயற்கை, வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களைச் சிதைத்து, நாட்டின் அனைத்து துறைகளிலும் பாதுகாப்பற்ற சூழலை முதலாளிகளே உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

அதானி குழுமத்தின் அறநெறியற்ற வியாபார செயல்பாடுகள் இப்போது அம்பலமாகி இருக்கிறது. இந்தக் குழுமத்திற்கு அரசாங்கம் அள்ளிக் கொடுத்திருக்கும் திட்டங்கள் மற்றும் சலுகைகள் தேசப் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்புகளைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது.

நமது மக்களின் வாழ்க்கைத் தரம் சரிந்திருப்பதும், சிலரிடம் மட்டும் செல்வம் பெருமளவில் குவிந்து வருவதும், நவீன தாராளமய முதலாளித்துவத்தைப் பா.ஜ.க கடைபிடிப்பதன் நேரடி பின்விளைவாகும். இத்தகைய சூழ்ச்சி நிறைந்த முறை குறித்து லெனின் கூறியதை நாம் கட்டாயம் நினைவுகூர வேண்டும்.

“முதலாளித்துவம், அது என்னவாக இருப்பினும், ஒருநாட்டின் வெகுமக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக உபரி மூலதனம் அங்கே பயன்படுத்தப்படாது, ஏனென்றால், அது முதலாளிகளின் இலாபத்தில் சரிவை உண்டாக்கும்.”

### சந்தை மதிப்பு இழப்பு

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகள் நிறைவடையவுள்ள இந்தக் காலகட்டத்தில், மனிதகுலத்திற்கான நிலைத்த வருங்காலம் மற்றும் முதலாளித்துவத்தின் பொருத்தப்பாடுகள் குறித்து உலகம் முழுவதிலும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அதானி குழுமம் அதன் சந்தை மதிப்பை இழந்திருப்பதும், 150 ஆண்டுகால கிரெடிட் சுவிஸ் வங்கி திவாலாகியிருப்பதும் நிதி மூலதன நெருக்கடிகளை அம்பலப்படுத்துகிறது.

> “முதலாளித்துவ மற்றும் ஏகாதிபத்திய சுரண்டலின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்தப் போர் நாம் வாழும் காலத்தில் தொடங்கப்பட்டதும் இல்லை, நம்முடன் முடிவுறப் போவதும் இல்லை. இந்தப் போரானது வரலாற்று நிகழ்வுகள் மற்றும் தற்போதுள்ள சூழல்களின் தவிர்க்கமுடியாத விளைவு ஆகும்.”

பருவ காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல், கடல் மட்டம் அதிகரிப்பு போன்ற பிரச்சனைகளால் வாழ்க்கை குறித்த தீவிர கவலைகளும் எழுந்துள்ளன.

மனிதத்தன்மையற்ற இந்த சுரண்டல்முறையானது, அதன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஆட்சிகளைக் கைப்பற்றுவது, மக்களைப் பிளவுபடுத்துவது, போர் மற்றும் மோதல்களை உருவாக்குவது என்று அனைத்து இழிவான ஆயுதங்களையும் பயன்படுத்துகிறது. சமுதாயத்தின் கூட்டு உழைப்பை வெகுசிலர் சுரண்டிக் கொழுத்திட வகை செய்யும் தற்போதைய முறையானது அறியாமையில் உள்ள மக்களின் வாழ்வைப் பலியிடுகிறது.

### சோசலிச லட்சியம்

இதற்கு எதிராகத் தான் பகத்சிங் வெகுண்டு எழுந்தார்; உன்னதமான சோஷலிச இலட்சியங்கள், சமத்துவம், வளமை மற்றும் சமாதானம் ஆகியவற்றை உயர்த்திப் பிடித்திட தம் இன்னுயிரையும் ஈந்தார். சோஷலிச இலட்சியத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் மறுநிர்மாணம் செய்திட அவர் விரும்பினார்.

அவரின் அந்த நிலைப்பாடு மிகச் சரியானது. மனிதகுலம் நீடித்து நிலைபெற்றிருக்க வேண்டுமென்றால், பேராசை மற்றும் பிளவுகளை அடித்தளமாகக் கொண்டிருக்கும் சமுதாயத்தை, ஒத்துழைப்பு மற்றும் ஒத்திசைவின் அடிப்படையில் அமையும் சமுதாயத்தைக் கொண்டு மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் துளியும் சந்தேகத்திற்கு இடமின்றி நம்மால் கூற முடியும்.

### தேசப்பற்று - தியாகம்

நமது தேசத்தின் பயணத்தில், தேசப்பற்று மற்றும் தியாகத்தின் குறியீடாக ஒப்பற்ற சிறப்பிடத்தை பகத்சிங் வகித்து வருகிறார். நமது தேசத்தின் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் உரிமைகளுக்காக, அவர் தனது இன்னுயிர் ஈந்து வீரமரணம் ஏற்றார்.

பிரித்தாளும் பிற்போக்கு வன்முறை கும்பல், மாவீரன் பகத்சிங்கின் புகழார்ந்த மரபைத் தனதாக்கிக் கொள்ள, மிகக் கடுமையாக முயன்று வருகிறது. பகத்சிங் ஒரு புரட்சிகர சிந்தனையாளர்; அவர்தம் செங்குருதியில் மதச்சார்பின்மை இரண்டறக் கலந்திருந்தது. தியாகம் என்றால் என்னவென்றும், எந்த இலட்சியத்திற்காகப் பகத் சிங் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

பகத்சிங்கின் கருத்துக்களை நாம் மக்களிடம் கொண்டு செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். பகத்சிங் கூறியதாவது: “முதலாளித்துவ மற்றும் ஏகாதிபத்திய சுரண்டலின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்தப் போர் நாம் வாழும் காலத்தில் தொடங்கப்பட்டதும் இல்லை, நம்முடன் முடிவுறப் போவதும் இல்லை. இந்தப் போரானது வரலாற்று நிகழ்வுகள் மற்றும் தற்போதுள்ள சூழல்களின் தவிர்க்கமுடியாத விளைவு ஆகும்.”



### தொடர் போராட்டம் - அர்ப்பணிப்பு

பகத்சிங்கின் தியாக வாழ்க்கை மற்றும் அவரது போராட்டங்களின் ஊடாக இந்தச் சமுதாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது நமது பணி ஆகும். தொடர் போராட்டம், அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் ஊடாக உண்மையானதொரு மக்களாட்சியை வென்றெடுப்பதன் மூலம் அவர்தம் புகழார்ந்த மரபை முன்னெடுத்துச் சென்றிட வேண்டும்.

நம்மைச் சுற்றிலும் சமத்துவமின்மை, சாதிய அமைப்பு, வகுப்புவாதம், ஆணாதிக்கம் மற்றும் மோதல்கள் அதிகரித்து வருகின்றன. நாம் இவற்றை எதிர்த்துப் போராடி முறியடித்து மக்களுக்கான வெற்றியை அடைய வேண்டும். அந்த உன்னத நோக்கத்திற்காகப் போராடுவதே பகத் சிங்கிற்கு நாம் செலுத்தும் மெய்யான அஞ் சலி ஆகும்.

**தமிழில்: அருண் அசோகன்**

# காங்கிரசை ஒரு போதும் அச்சுறுத்த முடியாது: பிரியங்கா

காங்கிரஸை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது என அக்கட்சியின் பொதுச் செயலர் பிரியங்கா கூறினார். தில்லியில் நடைபெற்ற போராட்டத்தில் பிரியங்கா பேசியதாவது:

‘நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த பிரதமரின் (ராஜீவ் காந்தி) மகன் (ராகுல் காந்தி) நாட்டின்ஒற்றுமைக்காக ஆயிரக்கணக்கானகி.மீ.தொலைவு நடைப்பயணம் மேற்கொண்டார். அவர் நாட்டை ஒருபோதும் அவமதிக்கமாட்டார். தேர்தலில் போட்டியிடவிடாமல் ராகுல் காந்தியைத் தடுக்க முயற்சிக்கும் பாஜக அரசின் அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரலெழுப்பும் நேரம் வந்துவிட்டது.

நேரு குடும்பத்தின் ரத்தமானது நாட்டின் ஜனநாயகத்தை வளர்த்தெடுத்தது. நாட்டின் ஜனநாயகத்துக்கு காங்கிரஸின் பெரும் தலைவர்கள் அடித்தளமிட்டனர். அத்தகைய ஜனநாயகத்தைக் காப்பதற்காக எதையும் செய்ய காங்கிரஸ் தயாராக உள்ளது. காங்கிரஸை அச்சுறுத்த பாஜக நினைத்தால், அது நடக்காது. காங்கிரஸ் ஒருபோதும் அஞ்சாது. தொழிலதிபர் கௌதம் அதானி குறித்து பிரதமர் நரேந்திர மோடியிடம் கேள்வி எழுப்பியதற்காகவே ராகுல் காந்தி மீதான தகுதிநீக்க நடவடிக்கையை பாஜக மேற்கொண்டுள்ளது. அதற்காக பாஜகவுக்கு தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்.

ராகுல் காந்தியை தேசவிரோதி எனவும், மீர் ஜாஃபர் எனவும் விமர்சிப்பது, அவரின் தந்தையை (ராஜீவ் காந்தி) அவமதிப்பது போலாகும். நாட்டின் முதல் பிரதமரின் (ஜவாஹர்லால் நேரு) குடும்பப் பெயரை ஏன் வைத்துக்கொள்ளவில்லை என ராகுலை நோக்கி பிரதமர் மோடி கேட்டார். அதற்காக அவர் மீது எந்த வழக்கும் பதியப்படவில்லை. இதுவரை நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால், இனி அமைதியாக இருக்க மாட்டோம். குடும்ப ஆட்சி என காங்கிரஸை பாஜக விமர்சிக்கிறது. அப்படியானால் கடவுள் ராமரும் பாண்டவர்களும்கூட குடும்ப ஆட்சியாளர்களா?’ என்றார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 52

## அதானியை நிலைப்படுத்த அதிரடிச் சோதனைகள்

“அதானி வெறும் முகம்தான். எல்லா பணமும் மோடியால் போடப்படுகிறது. இதில் 10 முதல் 20% வரை கமிஷன் பெறும் ஒரு மேலாளர்தான் அதானி. இந்த விவகாரம் குறித்து விசாரித்தால் கடைசியில் சிக்கப் போவது மோடிதான், அதானி அல்ல என்பதால்தான் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த முடியாது என பிஜேபி அரசு உறுதியாக மறுத்து வருகிறது” என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியிருக்கிறார்.

இந்த கோரிக்கைக்கு போட்டியாக, ராகுல் காந்தி வெளிநாட்டுக்கு சென்று மோடி அரசை குறை கூறி பேசி இருக்கிறார். இது நாட்டைக் கேவலப்படுத்தும் செயல். இதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்“ எனது பிஜேபி கூட்டணி கூச்சலிட்டு நாடாளுமன்றத்தை முடக்கியது.

“எனக்கு நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்பளியுங்கள். அங்கு நான் விளக்குகிறேன்” என்றார் ராகுல் காந்தி. நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் தானே பேச வாய்ப்பு கேட்கிறார். இனி இருக்கக் கூடாது என்று முடிவு கட்டினார்கள்.

திருடர்களின் பெயர்களுக்கு பின் மோடி என்று இருக்கிறது என்று அவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பேசியதை பயன்படுத்தி, பிரதமரை கேவலப்படுத்தி விட்டார் என்ற வழக்கை அவசரமாக விசாரிக்க துவங்கினர். தமக்குச் சாதகமாக தீர்ப்பு வர வேண்டும் என்பதற்காக, உரிமையியல் நீதிமன்ற உதவி நீதிபதியாக இருந்த ஒருவருக்கு, மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு தந்து இருக்கையில் அமர்த்தினர்.

இரண்டு ஆண்டு அல்லது அதற்கு மேல் குற்ற வழக்கு தண்டனை பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க இயலும். ஆகவே அவருக்கு இரண்டு ஆண்டு தண்டனை தரப்பட்டது. ஒரே நாள் இடைவெளியில் அவரை பதவி நீக்கம் செய்ததோடு, அரசு ஒதுக்கியிருந்த வீட்டை உடனே காலி செய்யுமாறு நோட்டீஸ் பறந்தது.

மோடி அரசுக்கு எதிரான நிலை எடுத்தாலும், ஒன்றுபட முடியாத நிலையில் எதிர்க்கட்சிகள் இருந்தன. ராகுல் காந்தியின் பதவி பறிப்பு, அவர்களை ஒரு மேடைக்கு வர வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. அரசியலமைப்புச் சட்ட முகமைகளை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்துவதாகக் கூறி, 14 கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தன.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்ததைக் கண்டு பிரதமர் அடுத்த கட்ட அவதூறுகளுக்குள் இறங்கி இருக்கிறார்.

“அனைத்து ஊழல் சக்திகளும் ஒன்றாக இணைந்து விட்டன. நாட்டின் ஜனநாயக நிறுவனங்களை பலவீனப்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. இந்தியாவை செயல்பட விடாமல் தடுக்கும் முயற்சியில், அரசியலமைப்பு நிறுவனங்கள் தாக்கப்படுகின்றன. குற்ற நடவடிக்கைகளை தண்டிக்க விடாமல் அரசு முகமைகள் மீது கேள்விகள் எழுப்பப்படுகின்றன” எனப் பொரிந்து தள்ளியுள்ளார்.

அரசுக்கு எதிரான செய்திகளை ஒளி பரப்பி வந்த என்டிடிவி தொலைக்காட்சி நிறுவனத்தில், வருமான வரி, அமலாக்கத்துறை ரெய்டு நடத்தப்பட்டது. அடுத்து அதானி அதை வாங்கினார். குவிண்ட் செய்தி நிறுவனத்தின் மீது ரெய்டு நடந்தது. அதை அதானி வாங்கி விட்டார். பம்பாய் விமான நிலையம் உள்ளிட்ட சில விமான நிலையங்கள் ஜிவிகே நிறுவனத்திடம் இருந்தன. அதன் மீது ரெய்டு நடந்தது. விமான நிலையங்களை அதானி வாங்கிவிட்டார். அம்புஜா, ஏசிசி சிமெண்ட் நிறுவனங்களில் ரெய்டு நடந்தது. அவற்றை அதானி வாங்கி விட்டார்.

டில்லி மாநகராட்சியை ஆம் ஆத்மி கைப்பற்றியது. மாநில துணை முதலமைச்சர் மனீஷ் சிசோடியா சாராய பேரம் நடத்தியதாக கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றம், மத்திய புலனாய்வு அமைப்பு, மத்திய ரிசர்வ் வங்கி, அமலாக்கத் துறை தொடங்கி தேர்தல் ஆணையம் வரை ஆர்எஸ்எஸ் பாஜக ஆணைக்கு அடிபணிய வேண்டிய கடும் ஜனநாயக நெருக்கடி நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து உச்சநீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றால், அரச அரசை செயல்பட விடாமல் தடுப்பதாக, குற்றத்தை சாதுர்யமாக எதிர்க்கட்சிகள் மீதே மோடி திருப்புகிறார்.

பாஜக தன்னை வலிமைப்படுத்துவதை காட்டிலும் தமக்கு எதிராக, எதிர் கட்சிகள் ஒன்று சேர்ந்து விடக்கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது. அதற்காக எந்த படுபாதகத்தையும் செய்வதற்கு ஆயத்தமாக உள்ளது.

எதிர்க் கட்சிகள் கவனமாக இருக்க வேண்டும்!

# பா.ஜ.க. ஆட்சியில் ஜனநாயகம் செத்து விட்டது!



## இரா.முத்தரசன் பேட்டி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் நாகர்கோவிலில் நிருபர்களிடம் கூறியதாவது:

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றி வருகிறது. இன்னும் சில வாக்குறுதிகள் இருக்கிறது. அதையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மாநில அரசின் கையில் மட்டும் இல்லை, ஒன்றிய அரசும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். பிரதமரின் பொருளாதார நிபுணர் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த சாத்தியம் இல்லை என தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் தேர்தல் வாக்குறுதிப்படி பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறி வருகிறார்.

மத்தியில் அண்ணாமலை கட்சிதான், ஆட்சியில் இருக்கிறது. எனவே ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்த அண்ணாமலை வலியுறுத்த வேண்டும்.

### ஜனநாயகம் செத்து விட்டது

2014ம் ஆண்டு பாஜக ஆட்சி வந்ததிலிருந்து ஜனநாயகம் செத்துவிட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட உரிமை உண்டு. அந்த உரிமையை பாஜக அரசு பறித்து இருக்கிறது. சர்வாதிகாரியாக, பாசிச கொள்கையை பிடித்துக்கொண்டு பிரதமர் மோடி செயல்படுகிறார்.

ராகுல் காந்திக்கு தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னையை ஒரு தனிப்பட்ட நபருக்கு ஏற்பட்டுள்ள பிரச்னையாக பார்க்கக் கூடாது. ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஆபத்தாக பார்க்க வேண்டும். தற்போது ராகுல் காந்திக்கு பின்னால் இந்த நாடே நிற்கிறது. தண்டனை வழங்கிய நீதிமன்றமே அதை 30 நாள் நிறுத்தி வைத்துள்ள நிலையில் மிக அவசரமாக ஒன்றிய அரசு ராகுலை தகுதி நீக்கம் செய்திருக்கிறார்கள்.

### அதானிக்காக நாடாளுமன்றம் முடக்கம்

ஜனநாயகத்தின் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதானி என்கிற தனிப்பட்ட நபருக்காக நாடாளுமன்றத்தையே பாஜக அரசு முடக்கி வைத்திருக்கிறது. நிலைக் குழுவுக்கு பிரச்னையை அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தும் பிரதமர் மவுனம் காத்து வருகிறார்.

ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வழங்குவோம் என பா.ஜ.க கூறியது. தற்போது ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகளாகி விட்டன. அதன்படி பார்த்தால் 18 கோடி பேருக்கு வேலை வழங்கி இருக்க வேண்டும்.

பாஜகவின் இந்த ஏமாற்று வேலையை மக்களிடம் விளக்கும் வகையில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் எங்கே எனது வேலை? என்ற பிரசார பயணத்தை தொடங்கி இருக்கிறது. இந்த பிரசார பயணம் ஏப்ரல் 2 ம் தேதி திருச்சியில் முடிவடைகிறது. 2024 நடை பெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியை தோற்கடித்து மாற்று ஆட்சி அமையும்.

### மீனவர்கள் மீது தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தடுக்கப்பட வேண்டும். இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு தமிழக மீனவர்களை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக கச்சத் தீவை மீட்க பாரதிய ஜனதா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆன்லைன் சூதாட்ட விவாகரத்தில் இனியும் ஆளுநர் ரவி அரசியல் செய்யக்கூடாது. உடனடியாக தமிழக அரசின் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

### 15 லட்சத்தை அரியருடன் சேர்த்து வழங்க வேண்டும்

தமிழ்நாடு அரசு மகளிருக்கான உரிமைத் தொகை அறிவித்திருக்கிறது. இந்த உரிமைத் தொகையை தி.மு.க. ஆட்சிக்கு வந்த நாள் முதல் கணக்கிட்டு வழங்க வேண்டும் என்று அண்ணாமலை கூறி இருக்கிறார். இது வரவேற்க கூடியது தான்.

அதே சமயத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொருவருடைய வங்கி கணக்கிலும் ரூ.15 லட்சம் செலுத்தப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார். தற்போது 9 ஆண்டுகள் ஆகிறது. எனவே இந்த தொகையையும் அரியர் தொகையுடன் சேர்த்து ஒன்றிய அரசு வழங்க அண்ணாமலை வலியுறுத்த வேண்டும் என்று இரா.முத்தரசன் கூறினார்.

பின்னர், நாகர்கோவில் செட்டிக்குளத்தில் நடந்த தோழர் ப.மாணிக்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கில் இரா.முத்தரசன் பங்கேற்றார். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்ட செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், பொருளாளர் தாமரைசிங், துணை செயலாளர் சுரேஷ் மேசியதாஸ், மாவட்ட குழு உறுப்பினர் அருணாசலம், பூதப்பாண்டி பேரூராட்சி துணைத்தலைவர் அனில்குமார், மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி

# பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு , மாவட்ட பிரதம பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் நலச் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட துணைத்தலைவர் செளந்திரபாண்டியன் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் அதியமான் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் பாலமுருகன் விளக்கவுரை நிகழ்த்தினார்.

சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ , மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி , மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் பேசினார்கள்.

பசும்பால் லிட்டருக்கு ரூ42, எருமைப்பால் லிட்டருக்கு ரூ52 உயர்த்தி வழங்க வேண்டும், கால்நடைகளுக்கு மானியத்துடன் காப்பீடு செய்ய வேண்டும், 50 சதவீத மானியத்துடன் ஆவின் தீவனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை மனுவை நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தார்கள். ஆர்ப்பாட்டத்தில் இடைக்கமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், சக்கணன், செல்வம், முனியசாமி, நகர செயலாளர் முத்துகுமார், மாவட்ட தலைவர் முனீஸ்வரன், நிர்வாககுழு உறுப்பினர்கள் தர்மராஜ், முருகன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# நல உரிமைச் சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டும்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், தமிழ்நாடு டயாலிசிஸ் டெக்னிசியன்கள் நலச் சங்கத் தலைவர் பி.வி.செந்தில்குமார் மற்றும் தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், ராஜஸ்தான் போன்று நல உரிமைச் சட்டத்தை தமிழ்நாடு அரசும் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த 2021 ஆண்டு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் நியமிக்கப்பட்ட 160 டயாலிசிஸ் டெக்னிசியன்களை, முதல்வர் மருத்துவக் காப்பீடு மூலம் அவுட்சோர்சிங் முறைக்கு தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளதை உடனடியாக கைவிடவேண்டும்.

ஊதியம் ரூ.20 ஆயிரத்திலிருந்து ரூ.8 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்ச ஊதிய சட்டத்திற்கு எதிரானது. எனவே, உடனடியாக ஊதிய உயர்வும் வழங்கிட வேண்டும்.

'சிறுநீரக மருத்துவப் பிரிவு துறைத் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கிட வேண்டும்.

தற்பொழுது பணியாற்றி வரும் அனைத்து டயாலிசிஸ் டெக்னிசியன்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் நான்கு பேர் மட்டுமே நிரந்தரப் பணியில் உள்ளனர் என்பது அதிர்ச்சி அளிக்கிறது.

டயாலிசிஸ் டெக்னிசியன்களுக்கான காலிப் பணியிடங்களை உடனடியாக நிரந்தர அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

மூன்று டயாலிசிஸ் படுக்கைகளுக்கு ஒரு டயாலிசிஸ் டெக்னிசியன் இருக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் வழிகாட்டுதல் அடிப்படையில் டயாலிசிஸ் டெக்னிசியன்களுக்கான, புதிய பணியிடங்களை உருவாக்கிட வேண்டும்,

இவை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கறுப்புப் பட்டை அணிந்து பணிக்குச் செல்லும் போராட்டம் ஏப்ரல் 5 முதல் 10 வரை நடைபெறும்.

அதைத் தொடர்ந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் 12.04.2023 புதன் அன்று சென்னையில் நடத்தப்படும்.

இந்தியா போன்ற மருத்துவம் மிகவும் தனியார் மயமான ஒரு நாட்டில், சொந்தப் பணத்திலிருந்து மக்கள் மருத்துவச் செலவை அதிகமாக செய்யும் ஒரு நாட்டில், ஏழை எளிய மக்களுக்கு மருத்துவம் கிட்டாத நிலை உள்ளது.

2019 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் பொது மருத்துவமனைகளின் எண்ணிக்கை 25778 . தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 43486 ஆகும். நமது மருத்துவத்துறை, நோயாளிகளில் 70 விழுக்காடு வரை தனியார் மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெறும் அளவில் தனியார் மயமாகியுள்ளதை




புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன. இதனால் ஏழைகளுக்கு மருத்துவ சிகிச்சைகள் எளிதில் கிட்டாத நிலை உள்ளது.

மருத்துவர்களுக்கே கூட முறையான மருத்துவ சிகிச்சை கிட்டாத நிலை உள்ளது .

சாதாரண மக்களுக்கு, மருத்துவ சிகிச்சைகள் கிட்டாத, இன்றைய நிலையில், அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைப்பதை உறுதி செய்ய ஒன்றிய மற்றும்மாநில அரசுகள்நடவடிக்கைஎடுக்க வேண்டும்.பொது சுகாதாரத்துறையை வலுப்படுத்த வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும். அரசு மருத்துவமனைகளை வணிகமயமாக்குவதையும், தனியார்மயமாக்குவதையும் கைவிட வேண்டும்.

ஏற்கனவே, ஒன்றிய பாஜக அரசு, நலத்தை அடிப்படை உரிமையாக அறிவிப்பதாக கூறிவிட்டு, அதில் இருந்து பின் வாங்கி விட்டது.

அனைவருக்கும் நலம் என்பதை அடிப்படை உரிமையாக ஒன்றிய அரசு மறுக்கிறது.

இனியாவது அனைவருக்கும் நலம் என்பதை அடிப்படை உரிமையாக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும்.

ஒன்றிய அரசே, நலம் என்பதை அடிப்படை உரிமையாக அறிவிக்காத சூழலில் , ராஜஸ்தான் அரசு, நல உரிமை (right to health) என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இது வரவேற்புக்குரியது.

தனியார் மருத்துவமனைகளும் அவசர சிகிச்சைகளை, மக்களுக்கு தேவையான நேரத்தில் வழங்க வேண்டும். அதற்கான செலவை அரசே ஏற்கும் எனவும் ராஜஸ்தான் அரசு கூறியுள்ளது. இது வரவேற்புக்குரியது.

நலஉரிமைசட்டத்தைநடைமுறைப்படுத்த, தனியார் மருத்துவமனைகளையும் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எனினும் தனியார் மருத்துவமனைகளை பயன்படுத்துவதை படிப்படியாக குறைக்க வேண்டும். அதற்கேற்ப அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பை அதிகரிக்க, தீவிர நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

அரசு மருத்துவமனைகளை மக்கள் பெருமளவு பயன்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்த்துக் கொள்வது தான் சரியாக இருக்கும்.

அதை விடுத்து ,நல உரிமை மசோதாவையே திரும்பப் பெற வேண்டும் ( Roll Back Right To Health Bill ) என்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடுவது சரியல்ல. கொடூரமான சட்டம் ( Draconian Act) என கூறி, போராட்டம் நடத்துவதும் சரியல்ல.

உலக நல நிறுவனமே , நலத்தை (Health) அடிப்படை உரிமையாக (Fundamental Right) ஆக்க வேண்டும் எனக் கூறியுள்ளது.

அதை நமது நாடும் செய்ய வேண்டாமா?

இன்னும் சொல்ல வேண்டுமானால், அனைவருக்கும் நலவாழ்வை உறுதி செய்யவும், நலத்தை அடிப்படை உரிமையாக்கவும் (right to health ) மருத்துவர்கள் தானே ,முன்னணியில் நின்று போராட வேண்டும். அதை விடுத்து நல உரிமை மசோதாவை திரும்பப்பெற வேண்டும் எனப் போராடுவது சரியல்ல.

நலத்தை அடிப்படை உரிமையாக்க ஒன்றிய அரசு உரிய சட்டத்தை கொண்டுவர வேண்டும்.

ராஜஸ்தான் அரசு கொண்டுவந்துள்ளது போன்ற ,நல உரிமைச் சட்டத்தை ,தமிழ்நாடு அரசும் கொண்டுவர வேண்டும்.

384 அத்தியாவசிய மருந்து மூலக் கூறுகளின் விலையை 12 விழுக்காட்டிற்கு மேல் உயர்த்திட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியிருப்பதால் 900 க்கும் மேற்பட்ட மருந்துகளின் விலை உயரும். இது ஏழை எளிய, நடுத்தர வர்க்க மக்களை மிகவும் பாதிக்கும்.

ஒன்றிய அரசு அம்முடிவை திரும்பப் பெற வேண்டும்.

குறைந்த விலையில் தரமான மருந்துகள் மக்களுக்கு கிடைத்திட பொதுத்துறை நிறுவனங்கள் மூலம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் மருந்துகளை உற்பத்தி செய்திட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

---

### பெண்களை தரக்குறைவாகப் பேசிய

# கேரள பா.ஜ.க. தலைவர் கே.சுரேந்திரன் மீது நடவடிக்கை எடு!

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வலியுறுத்தல்

பெண்கள் குறித்து தரக்குறைவாகப் பேசிய பா.ஜ.கவின் கேரள மாநில தலைவர் கே சுரேந்திரன் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று வலியுறுத்தி இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தேசிய தலைவர் அருணா ராய் மற்றும் பொதுச் செயலாளர் ஆனி ராஜா கூட்டாக எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பது பின்வருமாறு:

ஜி20 மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெறவுள்ள ஸ்த்ரீ சக்தி சம்மேளன் நிகழ்வுக்கான வரவேற்புக் குழுவை அமைந்திடும் நோக்கத்துடன் கடந்த மார்ச் 26 அன்று கேரள மாநிலம் திருச்சூரில் நடைபெற்ற கூட்டத்தை பா.ஜ.கவின் கேரள மாநில தலைவர் கே.சுரேந்திரன் தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள பெண் தலைவர்கள் குறித்து அவர் தரக்குறைவான கருத்துகளைக் கூறினார்.

இன்னும் சில மாதங்களில் ஜி20 மாநாட்டினை இந்தியா நடத்தவுள்ள நிலையில், கே சுரேந்திரனின் தரக்குறைவான கருத்துகள் தேசத்தின் பெருமை மற்றும் கண்ணியத்தைச் சிதைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கே.சுரேந்திரன் தெரிவித்துள்ள கருத்துகள், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியில் உள்ள பெண்களை மட்டுமின்றி, நாடு முழுவதிலும் உள்ள அனைத்து பெண்களையும் இழிவுபடுத்துவதாக இருக்கிறது என்று இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கருதுகிறது. எனவே, அவரது பெண்கள் விரோத கருத்துகளைக் கண்டிக்கிறோம்.

ஜி20அமைப்பிற்குதலைமையேற்றுள்ள இந்தியாவின் மாண்புமிகு பிரதமராகத் தாங்கள் பொறுப்பு வகித்து வருவதால், கே சுரேந்திரன் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

---

# வருந்துகிறோம்



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

51வது வட்ட மேற்கு கிளையின் மூத்த தோழர்

சுகுமார் நிட்டிங் **எஸ்.பழனிசாமி** அவர்களின் மனைவி

திருமதி. **ப.ராஜம்மாள்** அவர்கள்

30-03-2023 வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

**51வது வட்ட மேற்கு கிளை,**
**மூன்றாவது மண்டலக்குழு, திருப்பூர் மாவட்டம்**

# ஆதிதிராவிட - பழங்குடியின நல பள்ளிகளை பள்ளிக்கல்வியுடன் இணைப்பதால் ஆபத்து!



கே.கதிரவன்

ஆதிதிராவிட நலப் பள்ளிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டவை அல்ல, அயோத்திதாச பண்டிதர் மற்றும் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் கோரிக்கையால் 1898களில் ஆதிதிராவிடர் மக்களுக்கு என்று தனியான பள்ளிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரசின் மூலமாக உருவாக்கப்பட்டது.

ஆதி திராவிட மக்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கும் காலம் காலமாக ஆதிதிராவிடர் மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டதன் காரணத்தினாலும் சிறப்பு பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

அதன் காரணமாக குறைந்தது ஏழு மாணவர்கள் படிக்க விருப்பம் தெரிவித்தால் அங்கு பள்ளிகள் தனியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் வாயிலாக உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு காலகட்டங்களில் ஆதிதிராவிடர் நல பள்ளி மற்றும் பழங்குடியினர் நல பள்ளி என்ன கிட்டத்தட்ட 1466 பள்ளிகள் தமிழகம் முழுவதும் இயங்கி வருகின்றன. என்ன நோக்கத்திற்காக இப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் 100 ஆண்டுகள் கழித்தும் இன்றும் தீர்க்கப்படவில்லை.

### குடியிருப்பு அருகில் இருக்கும் பள்ளிகள்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் தற்பொழுது பெரும்பாலும் பட்டியலின மாணவர்கள் படித்து வருகின்றனர், நாளை பள்ளி கல்வித்துறையில் இதை இணைக்கும் பொழுது பட்டியல் இன மாணவர்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போகக் கூடும் என்ற அச்சம் எழுகின்றது.

குறிப்பாக பெரும்பாலான ஆதிதிராவிட நலப் பள்ளிகள் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் இடங்களில் அமைந்துள்ளது. ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் பெரும்பாலும் ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்கள் படிப்பதில்லை.ஆதிதிராவிடர் பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறையுடன் இணைக்கும் பொழுது ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்கள் படிக்க அங்கு வருவார்களா? என்ற சந்தேகமும் எழுகின்றது.

### பாகுபாடுகள் அதிகரிக்கலாம்

பள்ளிக்கல்விதுறையுடன் ஆதிதிராவிட பள்ளிகளை இணைக்கும் பொழுது பள்ளிக்கல்வி துறையில் ஆசிரியர்களாக பணியாற்றும் ஆதிதிராவிடர் அல்லாத ஆசிரியர்கள் ஆதிதிராவிட மாணவர்களை எவ்விதத்திலும் பாகுபாடு காட்ட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அளிக்க முடியுமா? என்றால் அது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஏனென்றால் தற்பொழுது தென் தமிழகத்தில் பள்ளி கல்வித்துறையில் நடக்கின்ற சாதிய பாகுபாகளை நாம் பார்த்துக் கொண்டு உள்ளோம்.

### ஆதிதிராவிடர் பள்ளிக்கு தனி இடஒதுக்கீடு

ஆதிதிராவிட நலப் பள்ளிகளை பள்ளி கல்வித்துறையுடன் இணைப்பதற்கான காரணம் ஆதிதிராவிட நலப் பள்ளிகளின் நிர்வாக காரணங்களுக்காக இணைக்கின்றோம் என்று கூறுகின்றனர். குறிப்பாக ஆதிதிராவிட பள்ளிகளில் மாணவர் தேர்ச்சி திறனோ அல்லது உயர் கல்வியில் மருத்துவம் மற்றும் பொறியியல் துறையில் மாணவர்கள் சென்று சேரவில்லை என்பதாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மருத்துவத்தில் அரசு பள்ளி மாணவர்கள் இடம் பிடிக்க முடியவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் தற்பொழுது அரசு பள்ளி மாணவர்களுக்காக 7.5 இட ஒதுக்கீடு அளித்த பிறகு அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவ படிப்பில் சேர்வது அதிகரித்துள்ளது. அது போல ஆதிதிராவிட பள்ளி மாணவர்களுக்கும் 2.5 இட ஒதுக்கீடு அளித்தால் ஆதிதிராவிட அரசு பள்ளி மாணவர்களும் மருத்துவத்தில் மற்றும் பொறியியல் துறையில் இடம் பிடிப்பர் என்பதை நாம் உறுதி இட்டு கூற முடியும்.



அரசு பள்ளிகளில் பெரும் அளவில் இடைநிற்றல் நடைபெற்று வருகிறது. ஆதிதிராவிட நலப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் பெரும்பாலும் தேர்வு எழுத வந்திருந்தனர். ஆகவே ஆதிதிராவிட நல பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி தேர்வில் வெற்றி பெற வைக்கின்றனர் என்ற கூற்று உறுதியாகின்றது.

அரசு பள்ளிகளில் பெரும் அளவில் இடைநிற்றல் நடைபெற்று வருகிறது. ஆதிதிராவிட நலப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் பெரும்பாலும் தேர்வு எழுத வந்திருந்தனர். ஆகவே ஆதிதிராவிட நல பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி தேர்வில் வெற்றி பெற வைக்கின்றனர் என்ற கூற்று உறுதியாகின்றது.

### சிறப்பு திட்டங்கள் நிறுத்தப்படலாம்

தற்பொழுது தமிழக அரசால் ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு வழங்கப்படும் முக்கியமான சிறப்பு திட்டங்கள் நாளை கிடைக்காமல் போகின்ற சூழ்நிலை ஏற்படும் என் அச்சம் எழுகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி மாணவர்களுக்காக உருவாக்கப்படும் சிறப்பு திட்டங்கள் இணைப்பிற்குப் பிறகு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அரசு அளிக்க முடியுமா? என்பதற்கு தெளிவான விடையில்லை. அதாவது ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் ஒன்று முதல் 12 வரை படிக்கின்ற மாணவர்களுக்கு நான்கு சீருடை வழங்கப்படுகிறது, இச்சீருடையும் பள்ளிக்கு அருகிலுள்ள சீருடையாளர்களை அழைத்து அவர்கள் மூலமாக ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் உடலுக்கேற்ற அளவு எடுத்து அதற்கு ஏற்ற சீருடைகளை ஆதிதிராவிட பள்ளியின் தலைமை ஆசிரியர் வழங்கி வருகின்றனர்.ஆனால் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் 8 வரை மட்டுமே சீருடை வழங்கப்படுகிறது. ஆகையால் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கென்று வழங்கப்படும் சீருடை இணைப்பிற்குப் பிறகு வழங்கப்படுமா? என்ற அச்சமும் நம்முள்ளே எழுகின்றது

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் பொதுத்தேர்வு எழுதும் 10 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல் மற்றும் வழிகாட்டி புத்தகம் இன்று வரை இலவசமாக பள்ளிகளில் வழங்கப்படுகிறது, ஆனால் அரசு பள்ளிகளில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு இது போன்ற வழிகாட்டி மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படவில்லை.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளியில் சாரணர் இயக்கத்தில் பங்கேற்கின்ற ஆதிதிராவிட மாணவர்களுக்கு அரசு தங்களின் சிறப்பு திட்டத்தின் மூலமாக மூன்று வருடத்திற்கு 55 ஆயிரம் ரூபாய் அளிக்கின்றது, இதன் மூலம் மாணவர்களுக்கான சாரணர் இயக்கத்திற்கு உரித்தான சீருடைகளை அரசின் நிதி உதவியோடு பெற்று வருகின்றனர்.

### இலவச சுற்றுலா

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் பொதுத்தேர்வு எழுதுகின்ற பத்தாவது, பன்னிரண்டாவது படிக்கும் மாணவர்களின் மன அழுத்தத்தை குறைப்பதற்காகவும் அவர்களுக்கு வருடத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு ஆதி திராவிட பள்ளிக்கும் கல்வி சுற்றுலாவிற்காக அளிக்கப்படுகின்றது ஆனால் அரசு பள்ளிகளுடன் ஆதிதிராவிட நலப் பள்ளிகளை இணைக்கும் பொழுது இவ்வித சுற்றுலாவிற்கான நிதி உதவி அளிக்கப்படுமா? என்ற கேள்விக்குறி எழுகின்றது.

ஆதிதிராவிட பள்ளிகளை இணைப்பதின் நோக்கமானது, நிர்வாக குறைபாடுகள் காரணமாக ஆதிதிராவிடர் நல பள்ளிகள் இன்றளவும் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்திலும் சரி அல்லது உயர் கல்வி செல்வதற்கான கல்வியை பெறவில்லை என்ற காரணத்திற்காகவும் இணைப்பை உருவாக்குகிறோம் என்ற அறிவிப்பு வெளியாகி உள்ளது.

ஆனால் தற்பொழுது ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் வேலை பணி அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர் அல்லாத பணியிடங்களான குமாஸ்தா மற்றும் கண்காணிப்பாளர்கள், அருகில் உள்ள மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அல்லது மாநில ஆதிதிராவிடர் நலத்துறைக்கு பணி அமர்த்தப்படுகின்றனர். ஆகையால் பலவித நிர்வாக முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன இதை தமிழக அரசு நிவர்த்தி செய்தாலே விடுதிகள் மற்றும் பள்ளிகள் மேம்படுத்தப்படும் என்று நம்பப்படுகின்றது.

### விடுதி காப்பாளர்களை தனியாக நியமனம் செய்க!

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் முழு நேர விடுதி காப்பாளராக பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் மூலமாக விடுதி காப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர் ஆதிதிராவிடர் நலத்துறையில் விடுதி காப்பாளர்களை தனியாக நியமனம் செய்வதில்லை ஆதிதிராவிட நல விடுதிகளில் விடுதி காப்பாளர்களாக ஆதிதிராவிட நல பள்ளிகளில் பணி அமர்த்தப்படும் ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர்.

இவர்கள் தங்களின் காப்பாளர் பதவி முடிந்தவுடன் பள்ளிக்கு சென்று பாடம் எடுப்பதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகையால் ஆதிதிராவிடர் நலத்துறையில் விடுதிக்காப்பாளருக்கு என்று தனியாக காப்பாளர்களை நியமித்தால் பள்ளிகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

பாதிக்கப்படும் ஆசிரியர்கள்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின நலப் பள்ளிகளில் தற்பொழுது ஒன்று முதல் ஐந்து வரை (இடைநிலை கல்வியில்) முழுவதும் ஆதிதிராவிட ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர், நாளை பள்ளி கல்வித்துறையில் இதனை இணைக்கும் பொழுது ஆதிதிராவிட ஆசிரியர்களுக்கு 19% வேலை மட்டுமே வழங்கப்படும் என்ற அச்சம் எழுகின்றது.

பனி மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு என்பது தற்பொழுது இடைநிலையில் இருந்து உயர் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராக பதவி அமர்த்தப்படும் சூழ்நிலை உள்ளது, ஆனால் பள்ளிக்கல்வித்துறையில் இணைக்கும் பொழுது ஒடுக்கப்பட்ட சூழ்நிலையில் இருந்து உருவாக்குகின்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராக பணியில் அமர முடியாத சூழ்நிலை ஏற்படும்.

ஆகவே தமிழக அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளை இணைக்கின்ற நோக்கத்தை கைவிட்டு, ஆதிதிராவிட நல பள்ளிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிந்து ஆதிதிராவிட மாணவர்களின் வாழ்க்கையை ஒளி பெற செய்ய வேண்டும் என்பதே பெருவாரியான மக்களின் வேண்டுகோளாகும்.

தொடர்புக்கு: 8667338638

# ஜிப்சம் தொழிற்சாலையை முத்துப்பேட்டையில் தொடங்குக

## சட்டப்பேரவையில் க.மாரிமுத்து எம்எல்ஏ வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து பேரவையில் பேசியது வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்றிருக்கின்ற வெடி விபத்து என்பது மிகக் கொடூரமானது. நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் உடனடியாக செயல்பட்டு, அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற வெடி விபத்துகளும், அகால மரணங்களும் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் பெரும் அச்சத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்துகின்றன. எனவே, இது போன்ற நிகழ்வுகள் இனிநடைபெறாமல் இருப்பதற்கு தமிழ்நாடு அரசாங்கம் உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். பாதுகாப்பான தொழில்களை, தொழிற்சாலைகளை உருவாக்கப்பட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

### ஆன்லைன் ரம்மிக்கு தடை

தமிழ்நாட்டினுடைய இளைஞர்களையும், மாணவர்களுடைய நலனையும் கருத்தில்கொண்டு, தாயுள்ளத்தோடு இந்தச் சட்ட மசோதாவை மீண்டும் இந்த அவையின்முன் கொண்டுவந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் என்பவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஆட்சி நடத்துகிற மக்கள் பிரதிநிதிகளுடைய வழி நடத்துகிற ஆட்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் அனைத்து திட்டங்களுக்கும், சட்டங்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளின் திட்டங்களுக்குத் தடங்கலாகத்தான் இருந்துகொண்டிருக்கிறார்.

எதிர்காலத்தில் இருக்கிற மாணவர்கள், இளைஞர்களின் எதிர்கால வாழ்வை பாதிக்கின்ற இந்த சட்டம் உடனடியாக அமலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இந்த சட்டம் உடனடியாக தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, இந்த இணையவழி விளையாட்டுகளையும், இணையவழி சூதாட்டத்தையும் உடனடியாக தடை செய்வதற்கான இந்த சட்ட திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிற தமிழ்நாடு அரசாங்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

### நிதிநிலை அறிக்கையில் மீது

இந்தப் பேரவையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையும், அதேபோல வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இங்கே முன்வைக்கப்பட்டிருக்கிற வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்மீதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய ஒவ்வொரு தனி மனிதனுடைய வளர்ச்சியும், தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியும், அதேபோல ஒவ்வொரு விவசாயியையும் கவனத்தில் கொண்டும், தம்முடைய நிதியமைச்சர் இங்கே ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, கடந்த ஆட்சியிலிருந்த 62 ஆயிரம் கோடி ரூபாய் நிதி நிலை பற்றாக்குறையை 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்து, இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது, பெருமையோடு பார்க்கிறது.

இதெற்கெல்லாம் மிக முக்கியமான காரணம், நம்முடைய அரசு, தமிழ்நாட்டினுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேர்த்தியான நிர்வாகம், நிதி ஆளுமையை முன்னிறுத்தி இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 2 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாட்டிற்கான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படி ஈர்க்கப்பட்டிருக்கின்ற இந்த முதலீடுகள்தான் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாய உற்பத்திக்கும் மிக முக்கிய காரணியாக இருக்கிறது.

நீங்கள் தொழிற்சாலைகளைத் தொடங்குகிறபோது, பெருமாநகரங்களை மையப்படுத்தி தொடங்கிவிட வேண்டாம். மாநகரத்தைப் பற்றி மட்டும் உங்களுடைய கவனத்தில் கொள்ளாமல், கிராமப்புற ஏழையெளியவர்களுக்கு, படித்தவர்களுக்கு பயன்படுகிற அளவிற்கு தொழிற்சாலைகளை நீங்கள் தொடங்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தொன்மையான தமிழ் வளர்ச்சியைப் பற்றி இங்கே அக்கறையோடு குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியாம் செம்மொழியைப் பாதுகாக்க, உயிர்நீத்த வீரத் தமிழன் தாளமுத்து, நடராசன் ஆகியோருக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற முதலமைச்சருக்கு நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

> முத்துப்பேட்டையை தனித் தாலுகாவாக 2010 ல் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பத்தாண்டுக் காலம் அண்ணா தி.மு.க. ஆட்சியில் அதை நடைமுறைப்படுத்தவே இல்லை. கடந்த இரண்டாண்டுகளாக தொடர்ந்து நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

### தமிழில் அம்பேத்கர் நூல்கள்

அதேபோல, சமூகநீதிப் போராட்டத்திலும் சரி, ஜனநாயக போராட்டத்திலும் சரி, களத்தில் நின்று போராடுகிற போராளிகளுக்கு சட்ட ரீதியான அறிவாயுதம் வழங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்களுடையநூல்களெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்று சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கின்ற இளைஞர்களுக்கும், தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களுக்கும் இந்தச் சட்டங்களைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்பாக அறிவித்திருக்கிற முதலமைச்சருக்கு மீண்டும் ஒருமுறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

### காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும்

நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. நிறைய தொழிலாளர்களுக்கும் வேலைகள் இங்கேதான் இருக்கின்றன. ஆனால், தொழிலாளர்களுடைய நிலைமை என்னவென்பதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். தமிழ்நாடு அரசினுடைய தேர்வாணையம் இருக்கின்றது. தேர்வாணையத்தின் மூலமாகத்தான் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

ஆனால், இன்றைக்கு outsourcing முறையில், வெளிக்கொணர்வு முறையில் ஆட்களைத் தேர்வு செய்கிறார்கள்.



ஒப்பந்தத்தின் அடிப்படையில், இன்றைக்கு அரசு அலுவலகங்களில் பணியாளர்களைத் தேர்வு செய்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளிலெல்லாம் இந்த முறைகள் வந்திருக்கின்றன.

அப்படி வந்ததினுடைய விளைவு, இன்றைக்கு படித்து முடித்திருக்கின்ற இளைஞர்களுடைய உழைப்புகளெல்லாம் தனியார்மூலம் சுரண்டப்படுகின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிடக் கூடாது.

சமூகநீதியை கடைபிடிக்கிற இந்த ஆட்சி, சமூகநீதி கண்ணோட்டத்தோடு அரசு அலுவலகங்களிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் தேர்வாணையம் மூலமாக பணியாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளும்ஏற்கெனவேபணியாளர்களாக இருக்கிறவர்களும், தொழிலாளர்களாக இருக்கிறவர்களும் இன்றைக்கு அவர்களுடைய நலன்களெல்லாம் புறந்தள்ளி விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைக்கு மருத்துவத் துறையில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அரசு மருத்துவமனைகளில் பல டாக்டர்கள் இன்றைக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஆயுஷ் மருத்துவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். டாஸ்மாக் ஊழியர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்கள் இருக்கிறார்கள். இப்படி பல்வேறு துறைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

அரசு, மருத்துவத் துறைக்காக ரூ.18,661 கோடி நிதியொதுக்கியுள்ளது. ஆனால், இன்றைக்கு பல அரசு மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்கள் அதிகம்இருக்கின்றன. எனவே, தேவையான இடங்களில் அரசு மருத்துவர்களைநியமனம்செய்யவேண்டும். திருத்துறைப்பூண்டியில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில்கூட நிறைய மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. நிறைய மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதையெல்லாம் இந்த அரசு கவனத்தில்கொண்டு உடனடியாக நிரப்பிட வேண்டும். அதேபோல, அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

### சமூக ஓய்வூதியத் திட்டம்

சமூக ஓய்வூதியத் திட்டம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு ரூ.5,346 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஓய்வூதியத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு முழுமையாக கிடைக்கிறதா? என்று பல கேள்விகள், குரல்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

### கோரிக்கைகள் அதிகம்

தயவுசெய்து ஒரு நிமிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை இங்கே குறைவுதான். ஆனால், மாநிலம் முழுவதும் எங்களிடம் வருகின்ற கோரிக்கைகளை இங்கே வைப்பதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டையை தனித்தாலுகாவாக 2010ல் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பத்தாண்டுக் காலம் அண்ணா தி.மு.க. ஆட்சியில் அதை நடைமுறைப்படுத்தவே இல்லை. கடந்த இரண்டாண்டுகளாக தொடர்ந்து நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### வேளாண் நிதிநிலை அறிக்கை

நம்முடைய வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை அளித்திருக்கிறார்கள். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை விவசாயிகளின் நலனில் மிக அக்கறையோடு செயல்பட்டிருக்கிறது. திருச்சியிலிருந்து நாகப்பட்டினம் வரை பெரும் தொழில்தடம் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்தத் தடத்தின் மூலமாக திருத்துறைப்பூண்டியில் வேதாரண்யத்திலிருந்து முத்துப்பேட்டை வரை கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் நீளம், 5 கிலோ மீட்டர் அகலத்திற்கு சதுப்பு நிலங்கள் இருக்கிறது. அந்த சதுப்பு நிலங்களில்தான் பொட்டாசியம், குரோமைட் கிடைக்கின்றன.

இப்படிப்பட்ட தாதுப்பொருட்களை வைத்து ஜிப்சம் தொழிற்சாலையை இந்த வேளாண் பெருந்திட்டத் தடத்தின் மூலமாக முத்துப்பேட்டையில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.



கானம் ராஜேந்திரன்
சி.பி.ஐ. கேரள மாநில செயலாளர்

# வைக்கம் பாரம்பரியம்: இ

**வைக்கம் சத்தியாகிரகம், சனாதன எதிர்ப்புப் போராட்டம் ஆகும். கேரளாவின் அரசியல் மற்றும் சமூக வளர்ச்சியில் அதற்கு இணையான நிகழ்வு வேறெதுவும் இல்லை. 1924ல் தொடங்கிய அப்போராட்டத்தின் நூற்றாண்டை நாம் தற்போது கொண்டாடுகிறோம்.**

அகிம்சை அடிப்படையிலான வைக்கம் போராட்டம் முதன் முறையாகத் தீண்டாமை மற்றும் முறையற்ற பழக்க வழக்கங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பிய இயக்கம்.

கேரளாவில், ஏன் இந்தியா முழுமையிலுமே முதலாவது வெற்றிகரமான போராட்டம் அது, உழைக்கும் மக்கள் சமூகச் சீர்திருத்தத்திற்காக ஆர்வமுடன் தீவிரமாக கலந்து கொண்ட இயக்கம் அது.

### சமூக விடுதலைப் போராட்டங்கள்

கேரளா கோட்டயம் மாவட்டத்தின் வைக்கம் தாலுக்காவில் நிலவிய சமூக அநீதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒரு போராட்ட வடிவமே வைக்கம் சத்தியாகிரகம். சுதந்திரப் போராட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பு கேரளாவில் சமூக விடுதலைக்கான நன்கு கட்டமைக்கப்பட்ட போராட்டங்கள் நிகழ்ந்தன. அந்த வரிசையில் முன்னே வரும் போராட்டம், பெண்கள் மார்பை மூடி தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ள உரிமை கோரி சாணார் சமூகத்தினர் நடத்திய 'தோள் சீலைப் போராட்டம்.'

அந்த இயக்கத்தின் லட்சியம் தாழ்ந்த சாதியாகக் கருதப்பட்ட சாணார் பெண்களுக்கு மானத்தைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் விரும்பும் வகையில் ஆடை உடுத்தச் சுதந்திரம் வேண்டும் என்பது மட்டுமே. ஆனால் அது முழுமையான சாதி முறைமையை எதிர்த்த ஒன்றல்ல.

### நாராயண குரு போராட்டம்

மாறாக சாதி முறைமையின் நம்பிக்கை அடித்தளத்தை 1888ல் ஸ்ரீநாராயண குரு நிறுவிய அருவிபுரம் பிரதிஷ்ட்டா (சிவன் கோயில்) ஏற்கனவே அசைத்து விட்டது.

ஸ்ரீநாராயண குருவின் செயல்பாடு கேரளாவின் சமூக இயக்கங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவு ஊக்கத்தையும் வேகத்தையும் சேர்த்தது. சடங்குகளை அனுசரிப்பதில் புதிய மேம்பாடுகளை அமல்படுத்தியும், எழுத்தறிவு மற்றும் கல்வியைப் பரப்புவதிலும் ஈடுபட்ட மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்கள் ஸ்ரீநாராயண குருவின் பாதையைத் தொடர்ந்தனர்.

ஸ்ரீநாராயண குரு, அய்யன்காளி, சட்டாம்பிசுவாமி, அய்யா வைகுண்ட சுவாமி, ஃபாதர் சவரா குரியாகோஸ் எலியாஸ், பொய்க்கைல் யோகண்ணன், டாக்டர் வேலுக்குட்டி ஆரயன் போன்ற பெருமக்கள் கேரள சமூகத்தைச் சமூக நீதி மற்றும் அதைத் தொடர்ந்து வழக்கொழிந்த பழமைவாத பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை பெறவும் வழி நடத்தியவர்கள்.

சாதிய முறைமையின் தடைகளைப் பிரித்தெறிய, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வேலுக்குட்டி ஆரயன் போன்ற அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நடந்தன.

கேரளாவில் சாதி அடிப்படையிலான சமத்துவமின்மை வைக்கம் சத்தியாகிரகத்தின் விளைவாய் கழன்று வீழத் தொடங்கியது, அதன் பாரம்பரியம் உயிர்ப்போடு வைக்கப்பட்டது. அது மற்ற இடங்களுக்கும் ஓர் உதாரணமாகி, சமூக மாற்றத்திற்கான பாதை சமைக்கப்பட்டது.

### கேரள முதலாவது கம்யூனிஸ்ட் அரசின் சாதனை

கேரள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் தேசிய இயக்க முற்போக்கு இடதுசாரி குழுவினரும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் உரிமைகளுக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தனர்; அதில் சமரா சத்தியாகிரக இயக்க முன்மாதிரிகளைப் பின்பற்றி சமூகப் புரட்சிக்கும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரின் விடுதலைக்காகவும் பாடுபட்டனர்.

கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை கட்சிக்குள்ளேயும்கூட





அதன் அமைப்பு மற்றும் மதிப்புறு விழுமியங்களில் தீவிர மாற்றங்களைக் கொண்டு வந்தது. வேளாண்மை, கல்வி, சுகாதாரம், சமூக நீதி, சமூகப் பாதுகாப்பு இவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பகுதிகளில் கட்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் தொடர்ச்சியாக விடாப்பிடியாகப் பின்பற்றப்பட்டன.

### வைக்கம் சத்தியாகிரகப் பின்னணி

மலபாரின் தீயர்கள் இன மக்களைவிட திருவாங்கூரின் ஈழவ இனத்தவர் இன்னும் மோசமான நிலையில் இருந்தனர். வைக்கம் சத்தியாகிரகத்தில் மற்றொரு கேள்விப்படாத பாரம்பரியம் அதில் நேரடியாக ஸ்ரீநாராயண குரு, மகாத்மா காந்தி மற்றும் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஈடுபட்டதாகும்.

அத்தகைய மாபெரும் சமூகச் சீர்திருத்தவாதிகள் அந்தச் சத்தியாகிரகத்தில் ஈடுபடுபட வேண்டிய தவிர்க்க முடியாத நிலைக்குக் காரணம், வைக்கம் மகாதேவச் க்ஷேத்ர சுற்றுப்பகுதியின் பொதுச் சாலைகள் தீண்டத்தகாத மக்களுக்குப் பயன்படுத்த முடியாத நிலையே நீடித்தது. அதுவும், திருவாங்கூர் சமஸ்தானத்தின் பொது வழித்தடங்கள், சாலைகள் 1865ல் சாதி, இன வேறுபாடு இன்றி மக்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்ட பிறகும் கோயில் வளாகத்தில் தீண்டத்தகாதோருக்குத் தடை. கோயிலைச் சுற்றிய நான்கு வீதிகளில் அவர்ணர்கள் சுதந்திரமாக நடந்து செல்லும் உரிமை மறுக்கப்படவே, ஸ்ரீநாராயண குரு அவர்களே தடை பிரச்சனையைக் கையாள நேர்ந்தது.

1923ல் காக்கிநாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் சத்தியாகிரகப் போராட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அந்த முரண்பாடு தேசிய கவனத்தை ஈர்த்தது. 1924 செப்டம்பர் 27ல் ஸ்ரீநாராயண குருவின் வருகை போராட்டக்காரர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தி ஒரு திருப்புமுனை ஆனது. 1925 மார்ச் மாதம் காந்தி முதன் முறையாக வைக்கம் வந்தார்.

---



எல்லை. சிவக்குமார்

# தமிழர் நாகரிகத் தொன்மையி

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 7அன்று சிவகங்கை மாவட்டம், கொந்தகை என்ற குக்கிராமத்தில், கீழடி தொல்பொருள் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரிய தொல்பொருள்களின் காப்பகத்தை திறந்து வைத்தார்.

இந்த அருங்காட்சியகம் தமிழர் நாகரிக தொன்மையின் கருவூலமாகத் திகழ்கிறது என்பது மிகையல்ல.

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் 15 கி.மீ. தொலைவில் இந்த அருங்காட்சியகம் 2 ஏக்கர் பரப்பளவில், 31 ஆயிரம் சதுர அடியில், ரூ.18 கோடியே 43 லட்சம் செலவில், இயற்கை எழிலுடன் செட்டிநாடு கட்டிடப் பணியில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் உலகத் தரத்தில் அமைந்துள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில் நுழைந்தவுடன் முதல் பகுதியில் தமிழகத்தின் முக்கியமான அகழ்வாய்வு தளங்களான சிவகளை, கொடுமணல், மயிலாடும்பாறை, அரிட்டாபட்டி உள்ளிட்ட 21 அகழ்வாய்வு தளங்கள் குறித்த வரைபடம் வண்ண ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது.

### அருங்காட்சியகம் குறித்த ஒலி-ஒளி

இந்த அருங்காட்சியகம் குறித்த 15 நிமிடங்கள் ஓடக்கூடிய ஒலி ஒளி காட்சி படமும் பார்வையாளர்களுக்கு திரையிட்டு காட்டப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து செட்டிநாடு வீடுகள் பாணியில் வடிவமைத்து விசாலமாக கட்டப்பட்ட 6 தனித்தனி வீடுகளில் மதுரையும், கீழடியும் வேளாண்மையும், நீர் மேலாண்மையும், கலம் செய்கோ ஆடையும், அணிகலன்களும் கடல் வழி வணிகம் வாழ்வியல், என்னும் ஆறு தலைப்புகளில் அரிய பல தொல்பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இவையனைத்தும் பண்டையக்கால நதிக்கரை நாகரிக வாழ்வியலைத் தேடி வைகை நதி கரையோரம் அமைந்துள்ள கீழடி, கொந்தவை, அகரம், மணல் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டவையாகும்.

### கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

அங்கு செங்கல் கட்டுமானம் யானை தந்தத்தால் செய்யப்பட்ட சீப்பு வளையல் காதணி உள்ளிட்ட அணிகலன்கள், மண்பாண்டங்கள், விரல் அளவு பானை, மிருக எலும்புகள், நூல் நூற்கும் தக்ளி, சதுரங்க ஆட்ட காய்கள், முதுமக்கள் தாழிகள் என பல வகையான மணிகள், வட்டச் சில்லுகள், சுடுமண் சிற்பங்கள், நாணயங்கள், தங்க ஆபரணங்கள் என பலவகையான தொல்பொருட்கள் சுமார் 18 ஆயிரம் பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது வியப்பில் ஆழ்த்துகிறது.

இந்த காட்சிகளுக்கு இடையில் ஆங்காங்கே பொருத்தமான சங்க பாடல் வரிகள் இடம் பெற்றுள்ளன.

அருங்காட்சியகத்தின் வெளிப்பகுதியில் நான்கு மாடங்களுடன் கூடிய தெப்பக்குளம் கல்மண்டபம் ஆகியவை கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

### 2200 ஆண்டுகளுக்கு முந்தியவை


2015ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் கட்ட அகழாய்வில் மருத்துவ குடுவைகள், உறை கிணறுகள், அரசு முத்திரைகள் என



6ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன. இந்த பொருட்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் இவை சுமார் 2200ஆண்டுகளுக்கு முந்தைய காலக் கட்டத்தை சார்ந்தவை என்று உறுதி செய்யப்பட்டது.

வைகை நதி நாகரிகமான தமிழர்களின் நாகரிகம் சிந்து, கங்கை நதி நாகரிகத்திற்கு முந்தைய நாகரிகம் என்பதற்கான சான்றாதாரங்கள் கிடைத்த நிலையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கீழடி அகழாய்வு பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்தது. இத்துடன் தொல்லியல் ஆய்வாளரான அமர்நாத்

# ந்துத்துவா சக்திகளை முறியடிப்பீர்



மரியாதைக்குரிய 'இந்தம்துருத்தி மனா'வில் சாதி அடிப்படையிலான கொடுமைகளுக்கு எதிராகக் காந்திஜி பேசினார்.

### நம்பூதிரிகள் வாதம்

இந்தம்துருத்தி மனாவில் வசித்த, வைக்கத்தின் பிற 48 இல்லங்களின் மீது உரிமையை வைத்திருந்த, பழைய மரபின் வந்த பிராமணர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கை இன்மை காரணமாகத் தாங்களே கடவுளின் தெய்வீகச் சட்டங்களைப் பாதுகாப்பவர்கள் என்று எண்ணி விட்டனர். இந்தம்துருத்தி மனைக்கு விஜயம் செய்த காந்தி இதனைத் தானே நேரில் காணும் வாய்ப்புப் பெற்றார்.

'தீண்டத்தகாதவர்கள் தங்களின் முந்தைய பிறவிகளில் செய்த பாவங்களின் காரணமாகத் தீண்டத்தகாத சாதிகளில் பிறந்து விட்டனர்' என்றும்; 'எனவே இந்தப் பிறவியில் அதற்காகக் கடவுளால் விதிக்கப்பட்ட தண்டனையை அவர்கள் அனுபவிப்பதே விதி' என்றும்', 'பிராமணர்களும் அரசரும் அந்தத் தண்டனையை நிறைவேற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்' என்றும் இந்தம்துருத்தி நம்பூதிரி காந்திஜியுடன் விவாதம் செய்தார்.

### உண்மையும் புரட்டும்

அவர்கள் காந்திஜியையே தங்கள் வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. மனைக்கு வெளியே தனியே இதற்காகப் பந்தல் அமைத்து காந்தியுடன் விவாதங்கள் நடந்தன. ஆனால் இந்த வரலாற்று நிகழ்வைப் பா.ஜ.க., 'மகாத்மாஜி தான் ஒரு பிராமணர் அல்லாதபடியால் அவரே வீட்டிற்குள் வருவதை மறுத்து விட்டார்' என்று வரலாற்றுப் புரட்டை நிறுவ முயற்சிக்கிறது.

இந்தம்துருத்தி மனை சொத்து தற்போது கம்யூனிஸ்ட் கட்சியிடம் உள்ளது. வரலாற்றுச் சக்கரச் சூழற்சியில் அங்கே நமது கட்சி அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அந்த முரண்நகை தொடர்கிறது. அதனை ஏஐடியுசி சங்கத்திடமிருந்தும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்தும் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சங்பரிவார் கும்பல் வாதிடுகிறது.

### மதத் தீவிரவாதிகளின் நோக்கம்

சாதாரண மக்கள் பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்துவதைத் தடுத்த, நான்கு வர்ணத்திற்கு வெளியே வைக்கப்பட்ட மலைசாதி மக்கள் போன்ற தாழ்த்தப்பட்டவர்களை கல்வி பெறுவதிலிருந்து தடுத்த பிராமணியச் சடங்குகளைக் கட்டாயமாக்கிய அதே சாதிய ஆதிக்கவாதிகளை மகிழ்விப்பதே பாஜகவின் இலக்கு. கேரள மறுமலர்ச்சி இயக்கத்தின் மரபுகள் மற்றும் விழுமியங்கள் மீது எதிர்மறையான சாயம் பூசும் அணுகுமுறைகளைப் பாஜக மற்றும் சங் பரிவார் சக்திகள் கடைபிடிக்கின்றன.

மதத் தீவிரவாதம் மற்றும் வகுப்புவாத நஞ்சைப் புகுத்தி, இடது ஜனநாயக முன்னணியைத் தூக்கி எறிய பாஜக அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறது. இதனுடன், நரேந்திர மோடி தலைமையிலான என்.டி.ஏ. நிர்வாகத்தால் கட்டற்ற சுதந்திரம் வழங்கப்பட்ட தீவிர வலதுசாரி வகுப்புவாதக் குழுக்களால் நமது ஜனநாயகம் ஒட்டுமொத்த ஆபத்திற்கு உள்ளாகியுள்ளது.

மதத் தீவிரவாதக் குழுக்களால் இடது ஜனநாயக முன்னணிக்கு மட்டுல்ல, பொருளாதாரச் சுதந்திரம், மதச்சார்பின்மை, அனைவருக்கும் சமமான சட்டத்தின் ஆட்சி, மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக முறைமை உள்ளிட்ட மக்களால் இதுவரை ஆக்கப்பட்ட அனைத்து வெற்றிகளுக்கும் ஆபத்து. சங் பரிவார் அமைப்புகளால் ஆதரித்து ஊக்கப்படுத்தப்படும் இந்து வகுப்புவாதம், மக்களின் பரவலான கடும் எதிர்ப்பைச் சந்தித்தே ஆக வேண்டும்.

ஜனநாயக விரோத பாசிசக் கருத்துக்களுடன் அவர்கள் நமது அற்புதமான தேசத்தின் பன்மைக் கலாச்சாரம் மற்றும் பன்மைத்துவத்தையும் ஒழித்துக் கட்ட கடைசி முயற்சிகளைச் செய்கிறார்கள்.

அதுமட்டுமா அதன் மூலம் அவர்கள் இந்திய தேசிய ஒற்றுமையையும், மக்களின் சகோதரத்துவ உணர்வையும் உழைக்கும் மக்களின் மதசார்பின்மை ஒற்றுமையும் நமது பன்மைத்துவப் பண்பாட்டின் சீர்மிகு அடையாளங்களை அழிக்கவும் முயற்சி செய்கிறார்கள். அவர்களால் நாட்டின் தலித்துகள் மற்றும் மதச் சிறுபான்மையினர்களைப் பாதிக்கும் நெருக்கடிகள் ஏராளம். வெறுப்பை விதைத்து, சிறுபான்மையினர்களை அடக்கி ஒடுக்கி அவமதித்து, சாதி மற்றும் பசு பாதுகாப்புப் பெயரால் பெருந்திரள் படுகொலைகளை நிகழ்த்தி இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை அவர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளமாகிய மதச்சார்பின்மை அவர்களது நிர்வாகத்தால் மதிக்கப்படுவதே இல்லை.

### மனுஸ்மிருதியின் வடிவம்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இந்துத்துவா அரசியல் கருத்தோட்டம் மனுஸ்மிருதியை அடிப்படையாகக் கொண்ட மதத் தேசியவாதத்தின் வடிவம். இந்துத்துவா மற்றும் அதன் ஒற்றுமையை ஆதரித்துப் பராமரிப்பதுடன் இந்து ராஷ்ட்டிராவை வளர்த்தும், தலித்கள் மற்றும் ஆதிவாசிகளை இரண்டாம் தரக் குடிமக்களாகவும் பாஜக நிர்வாகம் நடத்துகிறது. தலித்துகள், தலித் பெண்கள் மற்றும் தலித் சிறுமிகளுக்கு எதிரான கொடுமையான வன்முறை நிகழ்வுகள் இனரீதியான ஆழமான கவலைகளை எழுப்புகிறது. ஒரு பசுவைக் கொன்றதற்காக அவர்கள் தூக்கில் தொங்கவிடப்படுவதே இந்து மேல்சாதி அதிகாரத்தின் கீழ் தலித்கள் நடத்தப்படும் விதத்திற்கு அடையாளம்.

அந்தப் படுபாதகங்களை நிகழ்த்தும் வகுப்புவாதப் பாசிசத்தை முறியடிக்க ஒன்றுபடுவோம். அனைத்து இயக்கங்கள், மதசார்பற்ற கட்சிகள் ஒன்றாக இணைந்து, வகுப்புவாதப் பாசிசத்திற்கு எதிரான உறுதியான நிலைபாட்டை எடுக்கும் ஐக்கிய முன்னணி மூலம் மட்டுமே அதனைத் தோற்கடிக்க முடியும். மதசார்பற்ற இந்தியா தொடர்ந்து நீடிப்பதை உறுதிப்படுத்த இந்தத் தருணத்தின் கட்டாயத் தேவை பாசிசத்திற்கு எதிரான அத்தகைய ஐக்கிய முன்னணி.

ஆனால் பாஜக பிரதிநிதித்துவப்படுத்தும் வகுப்புவாதத்துடன் அனைத்திந்திய அளவில் வெற்றிகரமாக மோதிச் சண்டையிட தனித்த ஒரு கட்சியால் இயலாது. எனவே அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே முன்னணியாக ஒன்றுபட வேண்டும், அதுவே தற்போதைய அரசியல் சகாப்தத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும். அதைத்தான் வைக்கம் சத்தியாகிரகத்தின் பாரம்பரியம் நம்மிடம் கோருகிறது.

நன்றி : நியூஏஜ். தமிழில் : நீலகண்டன்

# ...ின் கருவூலம்... கீழடி அருங்காட்சியகம்



இராமகிருஷ்ணாவை அசாம் மாநிலத்திற்கு பணியிட மாற்றம் செய்து கீழடி அகழாய்வு பணிகளை முடக்கியது.

சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத் துறை தலைவராக பணியாற்றி ஒய்வு பெற்ற பேராசிரியர் வீ.அரசு தலைமையில் சில ஆய்வாளர்கள், தொல்லியல் அறிஞர்கள் ஒன்று கூடி மத்திய பா.ஜ.க. அரசு தனது குறுகிய நோக்கத்திற்காக கீழடி அகழாய்வு பணிகளை நிறுத்த முயல்கின்றனர்.

தென்னிந்தியாவில் மதச்சார்பற்ற கலாச்சாரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்த உள்ளதால் இந்த அகழாய்வு பணிகளை மத்திய பிஜேபி அரசு நிறுத்தியுள்ளது என்று குற்றம் சாட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து 2016 சனவரியில் மூன்றாம் கட்ட அகழாய்வு பணிகளை புதியதாக நியமிக்கப்பட்ட தொல்லியல் ஆய்வாளர் ராமன் தலைமையில் தொடங்கப்பட்டது. போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்று பாதியிலேயே திட்டமிட்டு அகழாய்வு பணிகளை மத்திய பா.ஜ.க. அரசு நிறுத்தியது.

### நான்காம் கட்ட பணிகள்

திண்டுக்கல்லை சார்ந்த வழக்கறிஞர் கனிமொழி மதி கீழடி அகழாய்வில் நான்காவது கட்ட பணிகளை மத்திய தொல்லியல் துறை தொடரவேண்டும், மாநில அரசின் தொல்லியல் துறையும் இந்த அகழாய்வு பணிகளில் ஈடுப்பட வேண்டும் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணா மீண்டும் தமிழ்நாட்டிற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு, அவரே இந்த ஆய்வுப் பணிகளை தொடரவேண்டும். இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்களை பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்த வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கின் விசாரணையில் அமர்வு நீதிபதியான ஆர். மகாதேவன் கீழடி அகழாய்வு மூலம் தமிழகத்தின் பெருமை உலகளவில் அங்கீகரிக்கப்படும் என்று தெரிந்தும் மத்திய அரசு பிடிவாதமாக இருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

கீழடி குறித்த இந்த வழக்கின் விளைவாக மத்திய அரசு முதல் இரண்டு கட்ட அகழாய்வு அறிக்கைகளை அமர்நாத் இராமகிருஷ்ணா தயாரிக்க அனுமதி அளித்தது. மூன்றாம் கட்ட அகழாய்வு பணிகளை முழுமையாக முடிக்கவும் முன் வந்தது. உயர் நீதிமன்ற உத்தரவை ஏற்று தமிழக அரசு 2017க்கும்2019க்கும் இடைப்பட்ட காலத்தில்நான்கு முதல்எட்டாம் கட்டம் வரையிலான நான்கு அகழாய்வுப் பணிகளை துரிதமாக முடித்தது. கிடைத்த பலப் பொருட்களை அமெரிக்கா நாட்டு ஆய்வகங்களுக்கு அனுப்பி அதன் ஆய்வு அறிக்கைகளை பெற்று 2019ம் ஆண்டில் முழுமையான ஆய்வறிக்கையை வெளியிட்டது. அருங்காட்சியகம் அமைத்திடவும் அடிக்கல் நாட்டியது.

2021ல் தொல்லியல் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்ற தங்கம் தென்னரசு, முதல் அமைச்சரின் தனிச் செயலாளராக பொறுப்பு ஏற்ற உதய சந்திரன், தலைமைசெயலாளராக பொறுப்பு ஏற்ற இறையன்பு ஆகியோரின் தொடர் கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் இன்றைக்கு உலகமே உற்று நோக்கும் அதிநவீன அருங்காட்சியகமாக அமைந்துள்ளது.

### தமிழரின் தொன்மையான நாகரிகம்

தமிழரின் நாகரிகத் தொன்மையை, வேளாண்மையை, நீர் மேலாண்மையை, கட்டடக்கலையை, தொழில் கருவிகள் உற்பத்தியை, கல்வியறிவை, வாழ்வியலை உலகிற்கு பறை சாற்றும் ஒரு வரலாற்று அருங்காட்சியகமாக கீழடி அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

இந்தியாவின் மிகவும் பழமையான நாகரிகமாக சிந்து சமவெளி நாகரிகம் கருதப்பட்டு வந்த நிலையில், இந்தியாவின் தெற்கே வைகை நதி கரையோரம் தமிழ் சமூகம் ஒரு நாகரிக சமூகமாக வாழ்ந்து இருக்கிறது என்பதை கீழடி அகழாய்வு உலகிற்கு உணர்த்தியுள்ளது.

தொடர்புக்கு: 9843177943

# "மக்கள் சேவையில் க.மலைச்சாமி ஐ.ஏ.எஸ்" நூல் வெளியீட்டு விழா



க.அய்யாசாமி எழுதிய "மக்கள் சேவையில் க.மலைச்சாமி ஐ.ஏ.எஸ்" என்னும் நூல் வெளியீட்டு விழா சென்னை மயிலாப்பூர் "கவிக்கோ" மன்றத்தில் மார்ச் 26 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவில்பட்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. விழாவில், தகைசால் தமிழரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான இரா.நல்லகண்ணு நூலை வெளியிட, மலைச்சாமியின் புதல்வி திருமதி மலர்விழி முதல் பிரதியை பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

சமூக ஆர்வலரும் திரைப்பட நடிகருமான இராஜேஷ், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி தா.சவுண்டையா, தமிழ் செம்மல் யு.எஸ்.எஸ்.ஆர்.நடராஜன், இதய நோய் நிபுணர் மருத்துவர் வி.சொக்கலிங்கம், கவிஞர் திருவை பாபு உள்ளிட்டோர் வாழ்த்துரைத்துப் பேசினர்.

### ஆன்லைன் அபராதத்தை கைவிடக் கோரி

# தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனம் ஏப்.11ல் ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளன பொதுக்குழு கூட்டம் புதுக்கோட்டையில் வி.பாண்டி தலைமையில் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. செயலாளர் ஜீவானந்தம் துவக்க உரையாற்றினார். தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி. பொதுச்செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார். மாநில சம்மேளன பொதுச்செயலாளர் பி.மாரியப்பன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம், புதுக்கோட்டை மாவட்ட சிபிஐ செயலாளர் செங்கோடன் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட ஏஐடியுசி கௌரவ தலைவர் சிங்கமுத்து, மாவட்டத் தலைவர் அரசப்பன், பாண்டியராஜன் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

காவல்துறை, வட்டார போக்குவரத்து துறை போடுகின்ற ஆன்லைன் அபராதத்தை கைவிட வேண்டும்.

ஆட்டோ தொழிலை, தொழிலாளர்களை பாதிக்கும் மோட்டார் வாகன சட்ட திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும்.

தமிழகத்தில் ஆட்டோ இயக்கத்திற்கான ஒரு செயலியை தமிழக அரசே உருவாக்கி மக்களின் பயணத் தேவையை பூர்த்தி செய்திட வேண்டும். இத்தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வுரிமையை பாதுகாத்திட வேண்டும்.

ஆட்டோ தொழிலில் ஏற்படும் பிரச்சனைக்கு தீர்வு காண முத்தரப்பு குழுவை அமைத்திட வேண்டும்.

60 வயது நிறைவு பெற்ற ஆட்டோ தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ரூ.9000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

ஆட்டோ தொழிலாளர்களுக்கான நல வாரிய பதிவுகளை வட்டார அளவிலான முகாம்களை நடத்தி பதிவு செய்திட வேண்டும், தொழிலாளர்களுக்கான பலன்களை காலம் கடத்தாமல் வழங்கிட வேண்டும்.

மானிய விலையில் பெட்ரோல், டீசல், கேஸ் வழங்கிட வேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஊழல்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்.11 அன்று அரசுத்துறை அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### போக்குவரத்து கழக தொழிலாளர்களின்

# ஓய்வூதிய திட்டத்தை அரசு பொறுப்பேற்று நடத்திட வேண்டும்!

## ஏஐடியூசி 3 வது மாநில மாநாட்டில் தீர்மானம்




தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓய்வூதியர்கள் சம்மேளனத்தின் 3வது மாநில மாநாடு மார்ச் 21 அன்று தஞ்சாவூர் அ.பீர்தம்பி நினைவரங்கில் ஓய்வூதியர் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்கள் பி.அப்பாத்துரை, ஆர்.நாச்சிமுத்து, ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டு கொடியினை ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் ஏற்றி வைத்து சிறப்பித்தார். மாநில துணைத் தலைவர் துரை. மதிவாணன் அனைவரையும் வரவேற்று பேசினார். அஞ்சலி தீர்மானத்தை சமமேளன துணைப் பொதுச் செயலாளர் எம். சுப்பிரமணியன் வாசித்தார்.

தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன் மாநில மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். வேலை அறிக்கையை சம்மேளன பொதுச் செயலாளர் ஆர். ஆறுமுகம் முன்வைத்தார் , பொருளாளர் கே.நேருதுரை வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். பேரவையில் தமிழ்நாடு ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், அரசு போக்குவரத்து ஏஐடியூசி மாநில தலைவர் எம்.ஆறுமுகம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, தமிழ்நாடு விவசாய சங்க தலைவர் முத்து உத்திராபதி, அகில இந்திய வழக்கறிஞர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் மு.அ.பாரதி, ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், தொலைதொடர்பு என் எஃப் டி இ மாநில செயலாளர் கே.நடராஜன், வங்கி ஊழியர் சங்க தஞ்சை மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

போக்குவரத்து கழகத் தொழிலாளர்களின் ஓய்வூதிய திட்டத்தினை அரசு பொறுப்பேற்று நடத்திட வேண்டும், 1.4.2003 ஏப்ரல் மாதத்தில் இருந்து பணியில் சேர்ந்த அனைத்து தொழிலாளர்களையும் பழைய ஓய்வூதிய திட்டத்தில் இணைக்க வேண்டும், ஏழாவது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் அரசு மற்றும் மின்வாரிய பணியாளர்களை போன்று ஊதியம் மற்றும் அகவிலைப்படி உயர்வு மாற்றி அமைக்கப்பட வேண்டும், ஒவ்வொரு முறை ஊதிய உயர்வு பேசப்படும் ஒப்பந்தங்களின்படி ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும், நோயுற்று அவதிப்படும் ஓய்வூதியர்களுக்கு அவர்களின் மருத்துவப் படியை எடுத்துக் கொண்டு மருத்துவ காப்பீட்டு திட்டம் அமல்படுத்திட வேண்டும், 2021 ஏப்ரல் மாதம் முதல் ஓய்வு, விருப்ப ஓய்வு, பணியில் இறந்து போன தொழிலாளர்களுக்கு பணப் பலன்களை வழங்கிட வேண்டும், பென்ஷன் விதி 20 ஏ யின் படி அரசு நிர்ணயம் செய்யும் அகவிலைப்படி உயர்வு வழங்கிட வேண்டும், அகவிலைப்படி உயர்வு சட்டபூர்வமான உரிமையாகும், 2015 நவம்பர் மாதம் முதல் உயர்ந்துவிட்ட 119 சதவீத அகவிலைப்படி உயர்வு மற்றும் 1.9.2016 முதல் 5% உயர்வுடன் 89 மாதங்கள் நிறுத்தி வைத்துள்ள அகவிலைப்படி உயர்வினை நிலுவைத் தொகையுடன் வழங்கப்பட வேண்டும், பணியில் இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி தகுதி அடிப்படையில் ஆண்டுதோறும் வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும், கடந்த 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வாரிசு பணிக்கு தேர்வு செய்யப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாக காத்திருக்கும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும், தண்டனை என்ற பெயரில் ஓய்வு பெற்றபின் ஓய்வு காலப்பலன்களை பிடித்தம் செய்யக்கூடாது, ஓய்வூதியர்களுக்கு பாதகமான 13வது ஊதிய ஒப்பந்த பிரிவினை ரத்து செய்திட வேண்டும், விருப்ப ஓய்வு, பணியில் இறந்து போனவர்களின் வாரிசுகள், ஓய்வூதியம் பெற்று இறந்து போன குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஆண்டு கணக்கில் வழங்கப்படாமல் உள்ள பென்ஷன் நிலுவைத் தொகையினை உடனடியாக வழங்க வேண்டும், திமுக தேர்தல் கால வாக்குறுதி அடிப்படையில் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் மாநில தலைவராக ஆர்.நாச்சிமுத்து, மாநில பொதுச் செயலாளராக எம்.நந்தாசிங் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பதவி உயர்வுக்கு லஞ்சம் கேட்டதால்

# தூய்மைப் பணியாளர் சுடலைமாடன் தற்கொலை

"உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மைபங பணியாளராக பணியாற்றி வரும் சுடலைமாடன், பணி மூப்பு அடிப்படையில் தூய்மைப்பணி மேற்பார்வையாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும் என பேரூராட்சி தலைவர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் பாபு ஆகியோரிடம் முறையிட்டுள்ளார்.


பேரூராட்சித் தலைவர், தனது மாமியாரும், முன்னாள் பேரூராட்சி தலைவருமான ஆயிஷா கல்லாசியை அணுகுமாறு சுடலைமாடனிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதனடிப்படையில் தூய்மைப் பணியாளர் சுடலைமாடன், முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசியை அணுகிய பொழுது, பதவி உயர்வுக்கு லஞ்சப்பணம் கேட்டுள்ளார். அதற்கு மறுப்பு தெரிவித்ததால் சுடலைமாடனை ஜாதிபெயரை சொல்லி அவதூறாக ஆயிஷா கல்லாசி பேசியுள்ளார். இந்த குற்றச் செய்கைக்கு செயல் அலுவலர் பாபு உடந்தையாக இருக்கின்றார். இதனால் மனமுடைந்த சுடலைமாடன் கடந்த 17ம் தேதி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சுடலைமாடன் மரணமடைந்துள்ளார். தூய்மைப் பணியாளர் சுடலைமாடன் மரணத்திற்கு காரணமான முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசி அவருக்கு உடந்தையாக இருந்த தற்போதைய பேரூராட்சிதலைவர் மற்றும் செயலக அலுவலர் பாபு ஆகியோர் மீது வழக்குப் பதிவுசெய்து, கைதுசெய்ய வேண்டும்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பி.கரும்பன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# மாதவரம் ஜெ.குமார் மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாதவரம் நகர முன்னாள் செயலாளர் ஜெ.குமார் அவர்கள் மார்ச் 27 அன்று இயற்கை எய்தினார். தொழிற் சங்கத் தலைவர் சி.கே.மாதவனின் தொழிற்சங்க நடவடிக்கையால் ஈர்க்கப்பட்டு அவரோடு இணைந்து பணியாற்றியவர். அவருடைய உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்ட குழு சார்பாக மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி மலர் மாலை வைத்து செவ்வஞ்சலி செலுத்தினர். இரங்கல் கூட்டத்திற்கு சி.ஜெ.ஆனந்தன் தலைமை தாங்கினார்.

சிபிஐ மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன், ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் ஜெ.அஜய் கோஸ், வி.திருவேங்கடம், சி.கே.எம்.ரூபன், கீ. சு.குமார், ஏ.ஆர்.இராதாகிருஷ்ணன் மற்றும் ராஜாமணி, எமன், முருகன், சி.ஜெயவேல், முனுசாமி, மீஞ்சூர் ஆனந்தன், மீஞ்சூர் பாலன் உள்ளிட்ட ஏராளமானோர் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கொடுங்கையூர் பாபு பாடல் ஒன்றை பாடினார்.

# சங்கே முழங்கு!



## ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு!




ஆவின் விற்பனை செய்யும் தயிர் உறைகளின் மீது ‘தஹி’ என்ற இந்திச் சொல்லைத்தான் எழுத வேண்டும் என ஒன்றிய அரசு கட்டாயப்படுத்துகிறது.


உணவுப் பொருட்களின் தரத்தையும், பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (Food Safety and Standards Authority of India- FSSAI).

உணவுப் பொருட்களை உறையில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனங்கள், அதற்கு உணவுப் பாதுகாப்பு தர ஆணையத்திடம் ஒப்புதல் பெற வேண்டும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, தர ஆணையம் மூலம் இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஒன்றிய பாஜக அரசு இறங்கியுள்ளது.

இதற்காக, தமிழ்நாட்டின் ஆவின், கர்நாடகத்தின் நந்தினி, கேரளத்தின் மில்மா உள்ளிட்ட பால் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் தயிர் உறைகளின் மீது தயிர் என்று எழுதக்கூடாது; மாறாக தஹி என்ற இந்திச் சொல்லை பெரிய எழுத்திலும், அதைத் தொடர்ந்து அடைப்புக்குறிக்குள் மாநில மொழிச் சொல்லையும் எழுத வேண்டும் என கட்டாயப்படுத்தி இருக்கிறது.

ஒன்றிய பாஜக அரசின் இந்த இந்தி திணிப்புக்கு தமிழகத்திலும் கர்நாடகத்திலும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. மக்களின் உணர்வுகளை மதியுங்கள்; இந்தி திணைப்பை கைவிடுங்கள் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடுமையாக கண்டித்துள்ளார். உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் சொல்வதை ஏற்க முடியாது என பால்வளத்துறை அமைச்சர் நாசர் தெரிவித்துள்ளார்.


F.No. SS/SP-14/Misc/2023-FSSAI
Food Safety and Standards Authority of India
(A Statutory Authority established under Food Safety and Standards Act, 2006)
(Science & Standards Division)
FDA Bhawan, Kotla Road, New Delhi– 110002
The 10th March, 2023

Subject: Request to retain the word "curd"-reg

Sir/Madam,

This is in reference to your representation to retain the word "Curd" in sub regulation 2.1.13 relating to "Standards of Fermented Milk Products" under clause 1, in item (a) and in clause 6, in sub clause (a), in item (i).

2. In this regard, it is submitted that FSSAI draft notified provisions for omission of the term "curd" from the standards of Dahi on 14.10.2021. The comments received from stakeholders were considered and a provision as below was introduced in the sub regulation 2.1.13(6)(a) w.r.t labelling requirement for standards of Fermented milk products as:

"*Provided that the name 'Fermented Milk' may be replaced with designations Dahi, and Yoghurt if the product complies with the relevant provisions of this Standard.* Provided further that in case of fermented products complying with the relevant provisions of *Dahi*, any other designation (prevalent regional common name) may be used together with the term '*Dahi*' in brackets on the label."

3. Accordingly, Dahi can also be labelled as per following examples:

"Dahi(Curd)" OR
"Dahi(Mosaru)" OR
"Dahi (Zaamut daud)" OR
"Dahi(Tayir)" OR
"Dahi(Perugu)" OR
"Dahi(Tair)" etc., based on the regional nomenclature used in different states for Dahi.

Mahavadiya Rajendra
Joint Director (Science and Standards)

இந்தி திணிப்பை முடுக்கிவிட்டுள்ள ஒன்றிய பாஜக அரசு, அதன் ஒரு பகுதியாக இந்தி மொழிச் சொற்களை அந்தந்த மொழிகளில் கலக்கச் செய்வது என்ற புதிய உத்தியை கையாளத் தொடங்கியுள்ளது. இப்படி எந்த வடிவில் இந்தியை திணித்தாலும் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது.

மாநில உரிமைகளுக்கு எதிராகவும்; தமிழ் உட்பட மக்கள் மொழிகளை அழிக்கும் நோக்குடனும் ஒன்றிய பாஜக அரசு இந்தி திணிப்பை மேற்கொண்டு வருவது முறியடிக்கப்பட வேண்டும்.

உணவுப் பொருட்களின் தரத்தையும், பாதுகாப்பையும் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (FSSAI), அந்தப் பணியைத்தான் மேற்கொள்ள வேண்டுமே தவிர இந்தி திணிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. மீறி ஒன்றிய பாஜக அரசின் இந்தி திணிப்பு நடவடிக்கைகளுக்கு துணை போனால், தமிழ்நாட்டு மக்கள் அதனை முறியடிப்பார்கள்.

– மணிமாறன், பத்திரிகையாளர்

## மார்ச் 23!

படுபாதகப் பிரிட்டானியக் கோழைகளால், தூக்கிலேற்றிக் கொல்லப்பட்ட மாவீரர்களான பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவுதினம் இன்று!

விக்டோரியா மகாராணியிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டு, விடுதலையான கோழை சாவர்க்கர் வாழ்ந்த அதே நாளில், நிமிர்ந்து நின்று,

“நானும் எனது தோழர்களும் பிரிட்டானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக போர்தொடுத்துள்ளோம்

எனவே, தூக்கில் போடாதே,கோழைகளல்ல நாங்கள்!

இந்தியாவின் விடுதலைப்போரின் போர்வீரர்கள்!

எங்கள் நெஞ்சை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொல்!

தூக்கிலேற்றும் இழிவுச் சாவு எங்களுக்கு வேண்டாம்!

என்று, பிடரி மயிர் குலுங்கிட முழங்கிய இந்தியத் தாய் பெற்றெடுத்த

சிங்கக்குட்டிகளே, லால்சலாம்!

சோசலிச இந்தியாவை படைக்கவிரும்பி உயிர் கொடுத்த சொக்கத்தங்கங்களே,

கொடுமையை என்னவென்று சொல்ல?

மகாராணியிடம் மண்டியிட்ட கும்பல், இந்தியர்களை சாதி, மதரீதியாக பிளவுபடுத்தி, பிரிட்டானிய மகாராணிக்குத் தொண்டூழியம் புரிந்த கும்பல்

அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டதே.....!

பகத்சிங்கின் பரம்பரையினர் தேசவிரோதிகளாம்!

உயிர்பிச்சை வேண்டி மண்டியிட்ட சாவர்க்கர் பரம்பரை தேசபக்தர்களாம்!

தூக்குக்கயிறு கழுத்தை இறுக்கியபோதும்

இன்குலாப் ஜிந்தாபாத் என்று முழங்கிய முழக்கம் இந்தியாவைத் தட்டி எழுப்பும்! அந்த முழக்கம் இன்றும் காற்றோடு காற்றாக கலந்து நிற்கிறது!

தேர்ந்தெடுக்க வேண்டிய வழி எது?

உயிர் பிச்சைக்காக மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுப் பிழைத்த சாவர்க்கரின் தேசவிரோத வழியா?

நெஞ்சில்சுடு! எங்களுக்கு உயிர் பெரிதல்ல, நாடு பெரிது என்று நெஞ்சை திறந்த படி நின்றபகத்சிங்கின் தேசபக்த வழியா?

சிந்திப்பீர்!



## இந்தியாவின் நன்நெறிகளுக்கு பேராபத்து

இந்திய நாட்டிற்கும், ஜனநாயக அரசியல் அமைப்பிற்கும், அரசியல் சாசனத்திற்கும்,

வேற்றுமையிலும் ஒற்றுமைக்கூறுகளை ஊடுருவிக் கண்டுணர்த்தி, மனிதகுலம் ஒன்றுபட்டு வாழக் கற்றுத்தந்த இந்தியாவின் நன்நெறிகளுக்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளது!

இந்தப்பெருந்தீங்கிலிருந்துஇந்தியாவைக் காப்பாற்ற விரும்புகிற அரசியல் இயக்கங்கள், குழுக்கள், தனிநபர்கள் என அனைவரும் வேற்றுமைகளை மறந்து, பாஜகவை ஒன்றுபட்டு எதிர்த்துப் போராட வேண்டும்!

இதில் பிளவுபட்டு நிற்பது, அல்லது பிளவுபடுத்துவது என்பது இந்திய நலன்களுக்கு எதிரான குற்றச்செயலாகும்!

இந்தப் ‘பாவம்‘! கங்கைநீர் முழுவதையும் கொண்டு கழுவினாலும் நீங்காது!

நாட்டைத் துறந்து, சொந்த நலன்களுக்காக, நாட்டையே பாழுங் கிணற்றில் தள்ளிக்கொல்லும் கொடுமைக்கு நிகரானதாகும்!

அதற்காக சில கட்சிகள் கள்ளத்தனமாக காரியமாற்றி வருவது அம்பலப்பட்டு வருகிறது!

அவர்களின் நோக்கம் தோல்வியில் இருந்து பாஜகவை காப்பாற்றிக்கரை ஏற்றுவதே ஆகும்!

பாரா உஷார்!

**கே.சுப்பராயன் எம்.பி.முகநூல் பதிவுகளிலிருந்து...**

### செங்கை மாவட்ட துணைச் செயலாளர்

## ஏ.பாலாஜியின் தந்தை என்.ஏழுமலை மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாளர் ஏ.பாலாஜியின் தந்தை என்.ஏழுமலை (வயது 74) உடல் நிலை குறைவின் காரணமாக மார்ச் 24 அன்று இயற்கை எய்தினார். அவருக்கு இ.நீலாவதி என்ற மனைவியும், இ.பாஸ்கர், இ.பாலாஜி, இ.செந்தில்குமார், இ.பிரகாஷ் ஆகிக நான்கு பிள்ளைகளும் உள்ளனர். தோழர் ஏழுமலை உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர், வி.வீராசாமி, ஐப்சோ மாவட்ட செயலாளர் எம்.முருகன், மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ், இளைஞர் பெருமன்ற பல்லாவரம் தொகுதி தலைவர் எல்.பிரவின்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### ராகுல் காந்தி தகுதிநீக்கம்:

## ஜனநாயக அழித்தொழிப்பை தடுத்து நிறுத்த ஒருங்கிணைவோம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்**

நரேந்திர மோடி குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக சூரத் நீதிமன்றம் விசாரித்து வந்த அவதூறு வழக்கில், அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கியுள்ளது. மேலும் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய 30 நாட்கள் கால அவகாசம் வழங்கி, பிணையும் தந்துள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில்தண்டனைசெயலுக்குவராது என நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒன்றிய அரசின் செகரட்டரி ஜெனரல் ராகுல் காந்தியின் மக்களவை உறுப்பினர் தகுதி இழந்ததாக கூறி, நாடாளுமன்ற உறுப்பினர் உரிமையை பறித்து உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முன்னணி பங்கு வகித்ததும், முதல் மூத்த அரசியல் கட்சியும், நாடாளுமன்றத்தின் முதன்மை எண்ணிக்கை பெற்றுள்ள எதிர்கட்சியுமான காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவரை தகுதி நீக்கம் செய்திருப்பது அசாதாரண நடவடிக்கையாகும். பாசிச வகைப்பட்ட தாக்குதலின் தீவிர வடிவமாகும். இனி நாட்டில் எவரும் பிரதமரின் நடவடிக்கையை விமர்சித்து பேச முடியாது என்ற சர்வாதிகார அடக்குமுறையின் அறிவிப்பாகும்.

குஜராத் மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டு நடந்த முஸ்லிம் இன அழிப்பு தாக்குதல் பற்றி பி.பி.சி. நிறுவனம் வெளியிட்ட ஆவணப்படம் கூறும் உண்மைகளையும், நாட்டின் செல்வாதாரங்களை கணக்கியல் மோசடி செய்து கௌதம் அதானியின் சட்டவிரோத கொள்ளை பற்றி ஹிண்டன் பர்க் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கை வெளிப்படுத்தும் செய்திகளையும் நாட்டு மக்களின் கவனத்தில் இருந்து திசைதிருப்பும் நோக்கம் கொண்ட நடவடிக்கையுமாகும், அரசியல் அமைப்பு சட்டத்தை சிதைக்கும் மரண அடியாகும்.

நாட்டை அறிவிக்கப்படாத அவசரநிலை நெருக்கடிக்குள் நெட்டித் தள்ளி, ஜனநாயக உரிமைகளை மறுத்து வரும்பாஜக ஒன்றிய அரசின் இரக்கமற்ற ஜனநாயகப் படுகொலையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன் ஜனநாயக சக்திகளும், தேசபக்தர்களும், மதச்சார்பற்ற மாண்பு காக்கும் நல்லெண்ணம் கொண்டோர், பகுத்தறிவாளர்கள், அறிவியல் சிந்தனை கொண்டோர் மனிதாபிமான உணர்வு கொண்டோர், அனைவரும் ஒன்றுபட்டு போராட முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

**தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர்**
**வாழ்வுரிமை இயக்கம்**
**மாநிலக்குழு கூட்டம்**

நாள் : 03.04.2023 காலை 10.00மணி
இடம் : இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகம்,
2, பெரியமிளகுபாறை, திருச்சி – 620 001
தோழர்கள் குறித்த நேரத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்.

இப்படிக்கு

**இரா.நல்லகண்ணு** தலைவர்
**மு.வீரபாண்டியன்** பொதுச் செயலாளர்

# வாழ்க மணமக்கள்

கோவை சூலூர் தெற்கு வட்டாரம், இருகூர் கட்சிக் கிளை துணைச் செயலாளர் கே.சௌந்தர்ராஜன் – கமலம் தம்பதியரின் இளைய மகள் எஸ்.சுகுணா – எஸ்.கார்த்திகேயன் ஆகியோரது மணவிழா மார்ச் 27 அன்று அவினாசி அருகே மங்கரசு வலையபாளையத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, சூலூர் தெற்கு வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.கோட்டியப்பன், இருகூர் கிளைச் செயலாளர் ஆர்.வீராசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக மணமக்கள் சார்பில் ரூ.3000 வழங்கப்பட்டது. ஜனசக்தி மணமக்களை வாழ்த்துகிறது.

◆◆◆

நாகப்பட்டினம் மாவட்டம் வி.தொ.ச. மாவட்டத் தலைவர் வி.இராமலிங்கம் – பூபதி மகன் முரளிதரன் – வேதவாகினி (எ) ரம்யா ஆகியோரது திருமணம் மஞ்சக்கொல்லையில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கோ.பழனிச்சாமி, பி.பத்மாவதி, வை.செல்வராஜ், சிவகுரு பாண்டியன், நாகை மாலி, வழக்கறிஞர் பாண்டியன், நாகை வி.மாரிமுத்து ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளித்தனர். ஜனசக்தி மணமக்களை வாழ்த்துகிறது.

◆◆◆

# பூப்புனித நீராட்டு விழா

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஒன்றியம் கோபாலபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை செயலாளர் சி.கருப்பசாமி – புவனேஸ்வரி மகள் க.கார்த்திகாதேவி பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர்கள் முனியசாமி, செல்வம், முன்னாள் விருதுநகர் நகர செயலாளர் முருகேசன் , கரியமால் ,இளங்கோ உள்ளிட்டோர் நேரில் சென்று வாழ்த்தினார்கள். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கப்பட்டது.

மாற்று பாதை கோரிக்கை

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் வெற்றி!



தென்காசி மாவட்டம் இராயகிரியில் இருந்து விஸ்வநாதபேரி வழியாக சிவகிரி செல்லும் மங்கம்மாள் சாலையில் அமைந்துள்ள கணபதி ஆற்றில் புதிய பாலம் கட்டும் பணி நடைபெற்ற நிலையில், போக்குவரத்திற்கு தற்காலிக மாற்று பாதை அமைக்காத காரணத்தினால் இராயகிரி முதல் சத்திரம், வடக்கு சத்திரம், விஸ்வநாதபுரி வழியாக சிவகிரி செல்லும் போக்குவரத்து ஒரு மாதத்திற்கு மேலாக முற்றிலுமாக தடை செய்யப்பட்டு அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்திவந்த நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தொடர்ச்சியாக பலமுறை புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், கடந்த மார்ச் 23ஆம் தேதி சிவகிரியில் அமைந்துள்ள நெடுஞ் சாலைத்துறை அலுவலகத்திற்கு பூட்டு போடும் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மார்ச் 22 அன்று சிவகிரி வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிவகிரி காவல்துறை ஆய்வாளர், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு உங்கள் கோரிக்கையை ஏற்று மேற்கண்ட மாற்று பாதை அமைத்துக் கொடுக்கப்படும் என்று எழுத்துப்பூர்வமாக உறுதி அளிக்கப்பட்டது. இந்த நிலையில் துரிதமாக மேற்கண்ட மாற்று பாதை பணி நடைபெற்று 40 நாட்களுக்குப் பிறகு மேற்கண்ட பிரதான சாலையில் போக்குவரத்து சரி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதி பொதுமக்கள் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் 92வது நினைவு தினம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுங்கரங்களால் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் கண்டு அஞ்சாமல் தங்களது இளம் வயதில் 1931 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று தூக்கு மேடையில் உயிர்த்தியாகம் செய்த பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் 92வது நினைவு தினமான மார்ச் 23 அன்று தமிழ்நாடு முழுவதும் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

**விருதுநகர்:**

விருதுநகர் மாவட்டம் சேத்தூரில் பகத்சிங் படத்திற்கு சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, நகர செயலாளர் ராஜா, தவிச அய்யணன், தவிதொச வரதராஜன், வழக்கறிஞர் பகத்சிங் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செய்தனர். இராஜபாளையம் கிழக்கு ஒன்றியம் சத்திரப்பட்டியில் இளைஞர்மன்ற வட்ட செயலாளர் மோகன் தலைமயில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன், ஏஐடியுசி முத்துமாரி உள்ளிட்டோர் பகத்சிங் படத்திற்கு மலரஞ்சலி செய்தனர்

**அரியலூர்:** அரியலூரில் நகராட்சி சுகாதார தொழிலாளர்கள் அலுவலகம் முன்பு பகத்சிங் படத்திற்கு பூமாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த. தண்டபாணி, நகராட்சி ஏஐடியுசி செயலாளர் ரெ.நல்லுசாமி, ம.கோபி, செ.மாரியப்பன், மு.அமிர்தவள்ளி, செல்லையா, க.அஞ்சலை, நாகூரார், மணி, சூரியா, செல்லாயி, ஆ.செல்வி, கோ.வளர்மதி, சிபிஐ அரியலூர் நகர கிளை ந.கோவிந்தசாமி, சாலையோர தெரு வியாபாரிகள் எஸ்.முரளிகிருஷ்ணன், சி. பன்னீர்செல்வம் உட்பட 50க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

**திருவாரூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்தில் புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது. நகரச் செயலாளர் எஸ்.செல்வம் தலைமையில் பகத்சிங்கின் உருவப்படத்திற்கு நகர செயற்குழு உறுப்பினர் எஸ்.இ.செல்லமணி மலர் மாலை அணிவித்தார். பகத்சிங்கின் வீர வாழ்க்கை வரலாற்றை நகரத் துணைச் செயலாளர் வீ.தர்மதாஸ் விளக்கி பேசினார். நகரச் செயலாளர் எஸ்.செல்வம், நகரக்குழு உறுப்பினர்கள் பாலதண்டாயுதம், மாரியப்பன், மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**மதுரை:** மதுரையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது.

**சிவகிரி:** ஈரோடு மாவட்டம் சிவகிரி புதிய பேருந்து நிலையத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பகத்சிங்கின் உருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு புகழஞ்சலி செலுத்தப்பட்டது. கொடுமுடி ஒன்றியசெயலாளர் ஆர்.ரணதிவேல் தலைமை தாங்கினார். நகரக்குழுசெயலாளர் மு.வ.(எ) வரதராஜன், ஒன்றியபொருளாளர் வி.சண்முகம், கொடுமுடி ஒன்றிய இளைஞர் பெருமன்ற பொறுப்பாளர் பி. வேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். த.க.இ.பெ. செயலாளர் சி.ஆறுமுகம், த.க.இ.பெ. மாவட்ட துணைச்செயலாளர் எஸ்.கே. கார்த்திகேயன் மூத்த தோழர் எஸ்.கே.சதாசிவம், மாதர்சங்க பொறுப்பாளர் ஆர்.செல்வி ஆகியோர் பகத்சிங் போராட்டங்கள்குறித்துப் பேசினர்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவீரன் பகத்சிங் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் தாலுகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன், மாவட்ட நிர்வாகிகள் சி.சுப்பிரமணியம், ஏஐடியுசி மாவட்ட நிர்வாகிகள் ஏ.பழனிசாமி, சி.ராஜேந்திரன், தாலுகா கமிட்டி உறுப்பினர்.ஏ.செல்வராஜ், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட நிர்வாகி எஸ்.சக்கரையப்பன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

டெல்லியில் அரசாங்க ஊழியர் சிறப்புநிலை கோரி

# ஏ.ஐ.டி.யு.சி. ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டத் தொழிலாளர்கள் போராட்டம்!



நாடு முழுவதிலும் இருந்து 5000க்கும் அதிகமான ஏஐடியூசி ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டத் தொழிலாளர்கள் புதுடெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் மார்ச் 28 அன்று அணிதிரண்டனர். ஏஐடியுசி பதாகையின் கீழ் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிட நாட்டின் மூளை முடுக்குகளில் இருந்தும் பெண் தொழிலாளர்கள் அணிதிரண்டு வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்க ஊழியர் சிறப்புநிலை எனும் பிரதான கோரிக்கையை வலியுறுத்திய தொழிலாளர்கள், அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் வரையிலும் குறைந்தபட்ச ஊதியம், சமூக பாதுகாப்பு மற்றும் மகப்பேறு கால நலன்கள் உள்ளிட்ட இதர கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றிட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

தற்போது, இந்தத் தொழிலாளர்கள் அனைவரும் திட்டத் தொழிலாளர்கள் என்று வகைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஒரு திட்டம் என்பது குறிப்பிட்ட காலவரையறையை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படுகிறது. ஆனால், அந்தத் தொழிலாளர்கள் மேற்கொள்ளும் பணியானது அத்தியாவசியமானது, தொடர்ச்சியானது மற்றும் நிரந்தரத்தன்மை கொண்டது ஆகும். இந்தத் தொழிலாளர்களின் சேவை தேசம் முழுமைக்குமானது; அவர்களின் பணி குறிப்பிட்ட காலவரையறைக்கோ அல்லது எந்தவொரு திட்டத்திற்கோ உட்படாதது ஆகும். ஆரம்ப சுகாதாரம், சத்துணவு, பெண்கள், குழந்தைகள் நலன் மற்றும் சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்களின் அனைத்துதிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் இந்தத் தொழிலாளர்கள் கேந்திரமான மையங்களாகச் செயலாற்றுகிறார்கள். ஆஷா தொழிலாளர்களின் போற்றுதலுக்குரிய பணியின் காரணமாகவே இந்தியாவில் மகப்பேறு கால தாய் சேய் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. அங்கன்வாடி மற்றும் மதிய உணவு திட்ட தொழிலாளர்களால் தான் சிறார்களின் பள்ளி இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது. கோடிக்கணக்கான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை இந்தத் தொழிலாளர் திரள் தான் உறுதிப்படுத்தியது.

கோவிட்19 பெருந்தொற்று நமது சுகாதாரத் துறையின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்திய போது, ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டத் தொழிலாளர்கள் தான் முன்களப் பணியாளர்களாகச் செயல்பட்டு பொதுமக்களுக்கு சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதி செய்தனர். பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் அவர்கள் ஆற்றிய மகத்தான பங்களிப்பை, ஐ.நா சபையின் உலக சுகாதார அமைப்பு விருது வழங்கி சிறப்பித்த போதும், இந்திய அரசாங்கம் போதிய அளவிற்கு அங்கீகரிக்கவோ, பாராட்டவோ இல்லை.

ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டத் தொழிலாளர்களின் பணி முறைப்படுத்துதல் கோரிக்கை நியாயமானது. அவர்களின் கோரிக்கை ஏற்கப்படும் வரை மேலும் தீவிரமான போராட்டங்களை ஏஐடியுசியின் ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டத் தொழிலாளர்கள் மேடை முன்னெடுக்கும்.

தொழிலாளர் பேரணியை ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் தொடங்கி வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள்பினாய் விஸ்வம் (சிபிஐ), எம்.சண்முகம் (திமுக) ஆகியோர் இப்பேரணியில் பங்கேற்று, உரையாற்றி தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள். ஏஐடியுசி தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் தலைமையிலான குழுவினர் ஒன்றிய அரசாங்கத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் ஷ்மிருதி இராணியிடம் கோரிக்கை மனுவை அளித்தனர். எல்.பி.எப் தொழிற்சங்கத்தின் சார்பில் எம். சண்முகம் எம்.பி அப்போது உடன் இருந்தார்.

சுகாதாரத்துறை, கல்வித்துறை மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர்களை இக்குழு விரைவில் சந்தித்து கோரிக்கை மனுக்களை அளிக்க இருக்கிறார்கள்.

# ஏ.ஐ.டி.யு.சி போக்குவரத்து கழக தொழிலாளர்களின் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்




பட்ஜெட்டில் தேவையான நிதி ஒதுக்கி அரசு போக்குவரத்து கழகங்களை பாதுகாத்திட வேண்டும், தனியார்மய நடவடிக்கைகளை கைவிட வேண்டும், வாரிசுதாரர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும், அனைவருக்கும் பழைய பென்ஷன் திட்டத்தை அமல் படுத்திட வேண்டும், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டத்தை அமல்படுத்திட வேண்டும், ஓய்வு பெற்ற தொழிலாளர் களின் 90 மாத கால அகவிலைப்படி உயர்வினை வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை பல்லவன் சாலை அரசு போக்குவரத்து கழக தலைமை அலுவலகம் முன்பு மார்ச் 28 அன்று ஏ.ஐ.டி.யு.சி. தொழிலாளர்களின் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில போக்குவரத்துக் கழக பொதுச் செயலாளர் ஜெ.ஸ்ரீதரன் தலைமை யில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சம்மேளனத்தின் பொறுப்பாளர்கள் கஜேந்திரன், பொதுச்செயலாளர் ஆர்.ஆறுமுகம், ஓய்வு பெற்ற சம்மேளன பொதுச் செயலாளர் எம். நந்தா சிங், கோவிந்தசாமி, ஏஐடியுசியின் வடசென்னை மாவட்ட தலைவர் கே. குப்பன், செயலாளர் அருள், தென் சென்னை மாவட்ட செயலாளர் அழகேசன் உள்ளிட்டோர் பேசினர்.

ஏ.ஐ.டி.யு.சி யின் மாநில பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார். வரும் பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை அரசு பாதுகாத்திட வேண்டும். ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கான பணப் பலன்களையும் வழங்கிட வேண்டும் என பேசினார். ஸ்ரீதரன் முடிவில் நன்றி தெரிவித்தார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூரில் ஜெபமாலைபுரம் போக்குவரத்து நகர் கிளை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை தலைமை வகித்தார். சங்கத் தலைவர் மல்லி.ஜி.தியாகராஜன் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி. சந்திரகுமார், மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் க.அன்பழகன், அரசு போக்குவரத்து ஓய்வூதியர் சம்மேளனத்தின் துணைத் தலைவர் துரை. மதிவாணன், கௌரவத் தலைவர் ஜெ.சந்திரமோகன் ஆகியோர் உரையாற்றினர். எஸ்.பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

## சிபிஐ தருமபுரி மாவட்ட அலுவலகத்தை அபகரிக்கும் நபர்களுக்கு
# சிபிஎம் கட்சியினர் சிலரின் ஆதரவு கவலையளிக்கிறது

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட அலுவலகத்தை அபகரிக்கும் வஞ்சகம் கொண்டோர் "அக்கிரம பிரவேசம்" எனக் கூறுவது உள்நோக்கம் கொண்டது. முத்து நினைவு அறக்கட்டளை தலைவர் வி.மாதன் (மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்) (22.03.2023) தருமபுரியில் செய்தியாளர்களை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில், 392 வட்டார வளர்ச்சி காலனி ( பழைய எண் 64 பி மற்றும் எப் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட அலுவலகம் (முத்து இல்லம்) குறித்து தவறான தகவலை வெளியிட்டுள்ளார். மாவட்ட கட்சி அலுவலகம் சென்று வரும் முன்னாள் எம். எல்ஏ. ந.நஞ்சப்பன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வன் ஆகியோர் அக்கிரம பிரவேசம் செய்ததாக கூறுவது உட்பட அவர் தெரிவித்துள்ள செய்திகள் அனைத்தும் தவறானது, உண்மைக்கு மாறானது. கட்சியின் பொதுச் சொத்துக்களை அபரிக்கும் உள்நோக்கம் கொண்டதாகும்.

செய்தியாளர்களை சந்தித்த வி.மாதன், அதில் கலந்து கொண்ட பி.இளம்பரிதி, ஜி. வெங்கட்ராமன் உள்ளிட்டோர், கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும், எல்லை மீறிய சீர்குலைவு செயல்களில் இறங்கியதாலும் 2012 அக்டோபர் 01 ஆம் தேதி கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள்.

இவர்கள் கட்சியில் இருந்த காலத்தில், அவர்கள் வசம் இருந்த ஆவணங்களை திருத்தி, கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பல மாதங்கள் கழித்து. முத்து குடும்பத்தினரை தவறாக வழிநடத்தி, பொதுமக்களிடம் நிதி வசூலித்து கட்டப்பட்ட மாவட்ட கட்சி அலுவலகத்தையும், இடத்தையும், தங்கள் தனிப்பட்ட சொத்தாக கருத வைத்து 06.08.2013 ஆம் தேதியில் ஒரு கிரயப்பத்திரம் பதிவு செய்துள்ளனர். இதில் முத்து குடும்பத்தினர் ரூ.30 லட்சம் ரொக்கப் பணம் பெற்றதாக கூறியுள்ளனர்.

இப்போது கட்சியின் தலைவர் என் முத்து மகன் திரு எம். கல்யாணசுந்தரம் "நாங்கள் யாரிடமும் எந்தப் பணமும் வாங்கவில்லை" என்று கூறியுள்ளார்.


மாவட்ட கட்சி அலுவலகம் தொடர்பான அசல் வழக்கு 205/2012 மாண்பமை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, இரண்டு மாத காலத்திற்குள் அசல் வழக்கு விசாரித்து முடிவு காண வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

இதனை தொடர்ந்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிறப்புப் பட்டியலிட்டு விசாரித்து மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. இதன் பிறகு ஐந்து ஆண்டுகள் காலம் கடந்து தற்போது மறுவிசாரணை மனுப்போட்டிருப்பதாக கூறுவது சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து மிரட்டி நிர்பந்திக்கும் கெட்ட நோக்கம் கொண்ட தாகும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை அபகரிக்கும் நபர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியில் சிலர் ஆதரவு காட்டுவது கவலையளிக்கிறது.

மதிப்பார்ந்த தலைவர் தோழர் என். முத்து, தனது தன்னலமற்ற சேவையால், உழைக்கும் மக்களின், குறிப்பாக அடித்தட்டு மக்களின் நலனுக்கு சேவைபுரிய அமைத்துக் கொடுத்த கட்சியின் மாவட்ட அலுவலகம் (முத்து இல்லம்) முற்றிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உரியது என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# கைத்தறி நெசவாளர் சங்க நிர்வாகிகள் தேர்வு



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் சேவூர் கைத்தறி நெசவாளர் சங்க கூட்டம் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கைத்தறி சம்மேளனத்தின் மாநில துணை செயலாளர் ஏ.மூர்த்தி தொடங்கி வைத்தார். மாவட்ட ஏஐடியுசி தலைவர் வே.முத்தையன், விதொச மாவட்ட செயலாளர் இரா.தங்கராஜ், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.எஸ்.மாதேஸ்வரன், வி.குப்புரங்கன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். தலைவராக அருணகிரி, செயலாளராக சேகர், பொருளாளராக சிரோன்மணி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். வாசுதேவன் நன்றி கூறினார்.

## தோழர் சரவணன் வீரையா இல்ல திருமண விழாவில்
# ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.5000



மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் நடைபெற்ற சரவணன் வீரையாவின் இல்லத் திருமண விழாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி பங்கேற்று திருமணத்தை நடத்தி வைத்தார். மணமக்களான ஏ.பி.கிரண் சந்துருவையும், மத்தியபிரதேச மாநிலத்தை சேர்ந்த எம்.ரூபாவையும் வாழ்த்தி அவர்களுக்கு ப.மாணிக்கம் நூற்றாண்டு மலரை பரிசாக வழங்கினார். இந்நிகழ்வில் மணமக்கள் ரூ. 5,000 ம் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக நா.பெரியசாமி அவர்களிடம் வழங்கினர்.

# பட்டா வழங்கக்கோரி காத்திருப்பு போராட்டம்




புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், தேக்காட்டூர் ஊராட்சிக்குட்பட்ட அரசநாயகிபுரம் பகுதியில் வீடு கட்டி சுமார் 30 ஆண்டுகளாக 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். வீட்டு வரி, மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மனைகளுக்கு பட்டா வழங்கவில்லை. பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கோரிக்கை நிறைவேறாத நிலையில் மார்ச் 21 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும், அப்பகுதிவாழ் பொதுமக்களும் கட்சியின் ஒன்றிய செயலாளர் செல்வகுமார் பெரமையா ஆகியோர் தலைமையில் புதுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பட்டா கிடைக்கும் வரை காத்திருப்பது என முடிவு செய்து காத்திருப்பு போராட்டத்தை தொடங்கினர். பெண்கள் குழந்தைகள் என குடும்பத்துடன் வந்த அனைவரும் தரையில் அமர்ந்து காத்திருந்தனர். அவர்களிடம் காவல்துறை அதிகாரிகள் மற்றும் கோட்டாட்சியர் பேச்சுவார்த்தை நடத்தி பட்டா வழங்குவதற்கு எந்த தடையும் இல்லை, அனைத்து வகையிலும் விசாரணை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதாகவும் அனைவருக்கும் விரைந்து பட்டா வழங்க ஏற்பாடு செய்வதாக எழுத்துப்பூர்வமாக தெரிவித்ததன் அடிப்படையில் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் த.செங்கோடன், மாவட்டத் துணைச் செயலாளர் கே.ஆர். தர்மராஜன், வி.தொ.ச. மாவட்ட செயலாளர் என்.ஆர்.ஜீவானந்தம் ஒன்றிய குழு உறுப்பினர்கள் அர்ஜுனன், கிருஷ்ணன், சேதுராமன், சக்திவேல், பிச்சம்மாள், நாடிமுத்து, பாண்டியராஜ் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

# இந்த வார தம்பிக்குறள்

## 112. எளிமை

**எளிமை எடுப்பான் இளகியான் அல்லான்**
**கடுமை கருதுவான் காண்.**

எளிமையான வாழ்க்கை வாழ்பவன், இளகிய மனம் உடையவனாகத்தான் இருப்பான் என எண்ணிவிடக் கூடாது. உரிய காலத்தில் மிக உறுதி படைத்தவனாக இருப்பான்.

**எளிய கருத்துடைமை எண்ணின் வலிய**
**கருத்துடையான் கண்ணே வுள.**

வலிமையான கருத்துக்கள் உடையவனிடம், நெருங்கிப் பார்த்தால், எளிமையான பண்புகளும் இருத்தலைக் காண முடியும்.

## நூல் நயம்




### எங்கே எனது வேலை?

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பாகபடித்துவேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கும், உழைக்கும் திறன் பெற்ற இதர இளைஞர்களுக்கும் அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு, தமிழகத்தின் சென்னை, ஓசூர், வேதாரண்யம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மையங்களில் புறப்பட்டு தமிழக முழுவதும் பிரச்சாரம் செய்து. திருச்சியில் ஏப்ரல் இரண்டாம் தேதி சங்கமிக்க இருக்கிற இளைஞர்களின் மிக முக்கிய கோரிக்கையான எங்கே எனது வேலை என்ற பிரச்சாரப்பயணம் நடைபெறுகிறது. அதனை விளக்கி இந்த பிரசுரம் எழுதப்பட்டுள்ளது. “இந்திய குடிமகன் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் பிறர் மதிக்கத்தக்க வாழ்க்கையாக இருக்க வேண்டுமென” இந்திய அரசியல் சாசனத்தை வகுத்தளித்த அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டு இருக்கிறார். அதன்படி தான் இந்திய இளைஞர்களின் வாழ்க்கை இருக்கிறதா என்றால் இல்லை. வேலையின்மை என்பது பெரும் சமூக பிரச்சனையாக உருவெடுத்து இருக்கிறது. இந்தியாவில் வேலை செய்வதற்கான தகுதி உள்ள திறமையான இளைஞர்களில் 33 சதவீதம் பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர். கடந்த ஆறு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு சந்தையில் நுழையும் உழைப்பாளிகள் எண்ணிக்கை ஆண்டுக்கு 1.75 கோடி பேர். ஆனால், வேலை பெறுவதோ 45 லட்சம் பேர் . அதாவது நான்கில் ஒருவர் தான் வேலை பெறுகிறார்கள். மீதமுள்ள 3 பேருக்கு வேலை கிடைப்பதில்லை.

பாஜக, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்று வாய் பந்தல் போட்டனர். ஆனால் இதுவரை யாருக்கும் வேலை வழங்கவில்லை . மாறாக வேலையில் இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பி கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி வந்த விவசாயம் , நெசவுத்தொழில் போன்றவையும் இன்றைக்கு பெரும் நெருக்கடியில் சிக்கி உள்ளது. அதேபோன்று கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட நிதியை படிப்படியாக குறைத்து அவர்களையும் வேலை இல்லாதவர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இவையெல்லாம் இன்றைக்கு பெரும் சமூக பிரச்சனையாக உள்ளதால் இவற்றிலிருந்து இளைஞர்களை விடுவிப்பதற்காக தான் இந்த பிரச்சார பயணம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. இதன் நோக்கங்களை இளைஞர்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இந்த பிரசுரம் எழுதப்பட்டுள்ளது. அனைவரும் வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

**பக்கம்** : 32 **விலை** : 10
**வெளியீடு** : அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், தமிழ்நாடு மாநிலக் குழு

### மீன்வளம் சார்ந்த தொழில்களில் சுய வேலைவாய்ப்புகள்




இந்தியாவில் மீன்வளம் சார்ந்த தொழில்களை செய்வதற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக ஆறு,ஏரி, குளங்கள், குட்டைகள், கண்மாய்கள் போன்றவைகளிலும், சொந்த நிலங்களிலும் பண்ணை குட்டைகள் அமைத்தும், மீன்வளம் சார்ந்த பல்வேறு தொழில்களில் எவ்வாறு சுய வேலைவாய்ப்பில் ஈடுபடலாம் என்பது குறித்தும். இவற்றிற்காக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவிகள். அரசு மானியங்களை எவ்வாறு பெற்று மீன்வள தொழில்களில் அபிவிருத்தி ஏற்படுத்தலாம் என்பது குறித்தும் இந்த நூல் விளக்குகிறது.

தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்கள், குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள் என 3. 85 லட்சம் ஏக்கர் பரப்பளவு கொண்ட நீர்நிலைகள் மீன் வளர்ப்புக்கு பெரிதும் துணை புரிகின்றன. மேலும் 6263 ஹெக்டர் நீர் பரப்பில் கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. உள்நாட்டு மீன்வளம், 2.36 லட்சம் உள்நாட்டு மீனவர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது. 2020–21 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1.10 லட்சம் டன்கள் அளவுக்கு கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூபாய் 5565 கோடி அந்நிய செலவாணியாக ஈட்டப்பட்டுள்ளது.

மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீன்கள், இறால்கள் பதனிடம் நிறுவனங்கள், அரசு தனியார் மீன் மற்றும் இறால் குஞ்சு பொரிப்பகங்கள் என அனைத்து உள்கட்ட அமைப்புகளையும் தமிழ்நாடு தன்னகத்தை கொண்டுள்ளது. மேலும் விவசாயிகள், மீனவர்கள் தங்கள் சொந்த நிலங்களிலேயே குட்டைகளை உருவாக்கி மீன் மற்றும் இறால் வளர்ப்புகளை மேற்கொள்ள அரசு உதவி செய்கிறது. அரசு மற்றும் தனியார் வங்கிகளும் இவர்களுக்கு தேவையான கடன் வசதிகளை வழங்குகிறது.

உலகில் மீன் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக மீன் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 7. 58 சதவீதமாக உள்ளது. இதே காலகட்டத்தில் கடல் சார்ந்த மீன்கள் , இறால்களின் ஏற்றுமதி 14 லட்சம் மெட்ரிக்டன்னாக , அதன் மதிப்பு ரூபாய் 46,559 கோடியாக உயர்ந்துள்ளது. நாம் இவற்றை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும். அதற்கான சாத்திய கூறுகளும், நீர் நிலைகளும் நம்மிடம் நிரம்ப உள்ளன. அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தில் டாக்டர் ஓ. ஹென்றி ஃபிரான்சிஸ் பல்வேறு தரவுகளுடனும், தகவல்களுடனும் இந்த நூலை எழுதியுள்ளார். இது சுய தொழில் செய்ய வேண்டும் என்கிற ஆர்வம் உள்ள ஒவ்வொருவருக்கும் பயனுள்ள நூலாகும். அனைவரும் வாங்கி படியுங்கள்.

–சமரன்

**நூலாசிரியர்** : டாக்டர் ஓ.ஹென்றி ஃபிரான்சிஸ்
**பக்கம்** : 254 **விலை**: 325
**வெளியீடு** : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

## சுழலும் உலகம்

## உக்ரைனில் ஓராண்டைக் கடந்து தொடரும் ஏகாதிபத்திய போர் 25 நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டறிக்கை!



உக்ரைனில் ஓராண்டைக் கடந்து தொடரும் ஏகாதிபத்திய போர் குறித்து பாகிஸ்தான், வங்கதேசம், கிரீஸ், பெல்ஜியம், கனடா, நார்வே, பாலஸ்தீனம், வெனிசூலா, உக்ரைன் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

முதலாளித்துவத்தை முறியடித்திட, ஏகாதிபத்திய போருக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்திட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டமைத்திட முதலாளித்துவ வர்க்கம் மற்றும் ஏகபோக சக்திகளுக்கு எதிரான போராட்டத்தை நாம் கூர்மைப்படுத்திட வேண்டும்.

சோவியத் ஒன்றியம் சிதைவுற்ற பிறகு ஏற்பட்ட மோசமான பின்விளைவுகளில் ஒன்றாக, உக்ரைனில் ஏகாதிபத்திய போர் ஓராண்டைக் கடந்தும் நடைபெற்று வருகிறது. சோவியத் ஒன்றியத்தின் கீழ் குடியரசுகளாக இருந்த போது, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளின் மக்களும் சமாதான சகவாழ்வுடன் கூடிய வளமான வாழ்வை வாழ்ந்து வந்தனர். கடந்த ஒன்பது ஆண்டுகளாக மோதல் போக்கு தொடர்ந்த நிலையில், அண்மைக் காலத்தில், நிலைமை மேலும் மோசமாகி, போர் எனும் படுகொலைக்கு வித்திட்டுவிட்டது. ஆசிய ஐரோப்பிய பிராந்தியத்தில் உள்ள சந்தைகள், மூலப் பொருள்கள், போக்குவரத்து வழித்தட இணைப்புகள், புவிசார் அரசியல் வியூகங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் முதலாளித்துவ ரஷ்யாவுடன், அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டணிக்கு ஏற்பட்டுள்ள கடும் போட்டியின் விளைவாகவே உக்ரைன் போர் ஏற்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய போரில் பாதிப்பிற்கு உள்ளாகி வரும் உக்ரைன் மற்றும் ரஷ்ய மக்களுக்கு கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் உற்ற துணையாக ஆதரவு தெரிவித்துக் கொள்கின்றன. இந்தப் போர் குறித்து ரஷ்யா,உக்ரைன் ஆகிய இரு தரப்பும் முன்வைக்கும் தவறான கூற்றுகளை நிராகரித்து விட்டு, உக்ரைனில் ஏற்பட்டு வரும் நிகழ்வுப் போக்குகள் அனைத்தும் ஏகபோக முதலாளித்துவ கட்டமைப்பிற்குள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறோம்.

இரு நாடுகளிலும் ஏகாதிபத்திய போர் தீவிரமாக நடைபெற்று வந்த கடந்த ஆண்டில், கம்யூனிஸ்டுகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. கம்யூனிஸ்ட் விரோத, பாசிச மற்றும் இதர தேசியவாத சக்திகளுக்கு எதிராக, நாம் போராடி வருகிறோம்.

**ஏகாதிபத்திய போருக்கு புதிய ஆயுதங்கள் அனுப்பப்படுவதை எதிர்த்து, துறைமுகங்கள், நெடுஞ் சாலைகள், இரயில் நிலையங்கள், நேட்டோ மற்றும் அமெரிக்க இராணுவ தளங்கள் ஆகியவற்றின் முன்பும், வெளியிலும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், வெகுமக்கள் இயக்கங்கள், கண்டன அறிக்கைகள் மூலமாக, ஏகாதிபத்திய போருக்கு எதிராக வெகுமக்களை அணிதிரட்டும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு, அவற்றின் பணிகளுக்கு வீரவணக்கம் செய்கிறோம். இந்த நடவடிக்கைகளில் இணைந்து செயல்பட நமது இதர சகோதர கட்சிகளை அழைக்கிறோம்.**

ஏகபோக சக்திகளின் நலன்களை முன்னிறுத்தும் எந்தவொரு ஏகாதிபத்திய அணிக்கும் ஆதரவாகச் செயல்பட மக்கள் விரும்பவில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நாம் அழுத்தமாகப் பதிவு செய்கிறோம்.

முதலாளித்துவ சக்திகளின் பொய்யான பரப்புரைகளுக்கு எதிரான தங்களின் போராட்டத்தினை, இந்தப் போரில் சிக்கியுள்ள நாடுகளின் மக்கள் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று நாம் அறைகூவல் விடுக்கிறோம்.

**இராணுவ தளங்கள் மூடப்பட வேண்டும்; வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இராணுவ படைகள் அவரவர் தாய்நாடு திரும்ப வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். நேட்டோ போன்ற இராணுவ கூட்டு அமைப்பு மற்றும் இதர ஏகாதிபத்திய அமைப்புகளில் இருந்து தத்தம் நாடுகளை விடுவிப்பதற்கான போராட்டங்களைத் தீவிரப்படுத்த அறைகூவல் விடுக்கிறோம்.**

உழைக்கும் மக்கள் அவர்களுக்கான ஒரு பாதையை அவர்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும்; முதலாளித்துவதைத் தூக்கியெறிந்திட, ஏகபோக சக்திகள் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும். மக்களிடையே சமாதானம், நட்புறவு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவை தழைத்தோங்குவதற்கு அவசியமான சோசலிசத்தைக் கட்டமைக்க வேண்டும்.

## வெனிசூலா: நிக்கோலஸ் மதுரோவின் அரசாங்கத்திற்கு வெனிசூலா கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

புதிய ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், வெனிசூலாவின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள நிக்கோலஸ் மதுரோவின் அரசாங்கத்திற்கு வெனிசூலா கம்யூனிஸ்ட் கட்சி அதன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது குறித்து அக்கட்சியின் அரசியல் விவகாரக் குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன் சுருக்கம் பின்வருமாறு:

ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து வெளியாகியுள்ள தகவல்கள், அரசாங்கம் அறநெறி தவறி சீர்குலைந்து இருப்பதற்கு ஒரு சிறு சான்றாக இருக்கிறது என்பதை வெனிசூலா கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விவகாரக் குழு கவனத்தில் எடுத்துக் கொள்வதுடன் பின்வரும் கருத்துகளையும் பதிவு செய்கிறது.

ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆளுங்கட்சியின் உள்விவகாரமாகக் கருதுவதை நாம் மறுதலிக்கிறோம். ஊழலுக்கு எதிரான ஒரு மெய்யான போராட்டத்தை நடத்துவதற்குப் பதிலாக தேர்தல் வியூகம் ஒன்று வகுக்கப்படுவதையே நாம் காண முடிகிறது. என்ன நடக்கிறது? கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அதற்கான காரணங்கள் என்ன? ஆகியவை குறித்து வெனிசூலா மக்களுக்கு அரசாங்கம் வெளிப்படையாகத் தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

ஊழல் விவகாரங்களில் அரசாங்கத்திற்கு உள்ள பொறுப்பைத் தட்டிக்கழிக்க நிக்கோலஸ் மதுரோ அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை, வெனிசூலா கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. பொது நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய சீரழிவிற்கு ஆட்சி நிர்வாகத்தில் உள்ள ரகசியத்தன்மை தான் அடிப்படைக் காரணம் ஆகும். ஊழல் பேர்வழிகள் சட்டப் பாதுகாப்பும், அரசாங்க ஆதரவும் பெற்றவர்களாக இருப்பது வருத்தத்திற்குரியதாகும். எனவே, அரசாங்கம் வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புடைத்தன்மையையும், பொது நிர்வாகத்தின் மீது சமூக கட்டுப்பாட்டையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வெனிசூலா கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது.

ஊழலுக்கு எதிராகப் போராடிய தொழிலாளர்கள் மீது, ஊழல் பேர்வழிகளை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், போலியான சாட்சியங்களை ஜோடித்து வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. வழக்கு விசாரணையின் போது, சாட்சியங்கள் பொய் என்று நிரூபணமான பிறகும் கூட தொழிலாளர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்படுகிறார்கள். இது போல் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது.

தமிழில்: அருண் அசோகன்




எங்கே எனது
வேலை?
AIYF


எங்கே எனது
வேலை?
AIYF






எங்கே எனது
வேலை?
AIYF


எங்கே எனது
வேலை?
AIYF


AIYF


P.V. GIRI HARDWARES
வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கு!
ஒன்றிய அரசே! மாநில அரசே!
எங்கே எனது
வேலை?
AIYF
இளைஞர் எழுச்சி தொடர் பரப்புரைப் பயணம்
மார்ச் 23 - ஏப்ரல் 2, 2023
ஓசூர் பயணக்குழு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்

ஜனசக்தி

**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023

**Posted on 01.04.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57























Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.